Registered as a Newspaper    பக்கங்கள் 6    விலை: ரூபா 5 00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    மார்கழி 12    ( 27 12-93 )    திங்கட்கிழமை    ஓசை 312

## கண்பார்வை பாதிக்கப்பட்டோருக்கு லேசர் சிகிச்சை வழங்க முயற்சி

குளுக்கோமாநோயினால்குருட்டுத்தன்மைஏற்பட்டவர்களுக்குபுதியலேசர்சிகிச்சை மேற்கொள்ளவெனகொழும்புகண்ணாஸ்பத்திரியில்இயந்திரம்ஒன்றுபொருத்தப்பட்டுள்ளது. குளுக்கோமாவினால் பாதிக்கப்பட்டுள்ள உலகெங்கனுமுள்ள இலட்சக்கணக்கான மக்களுக்கு நன்மையளிக்கக் கூடிய ஜேர்மனியின் பரீட்சார்த்த திட்டம் ஒன்றின் கீழேயே 50 லட்சம் ரூபா பெறுமதியுடைய இவ் இயந்திரம் கொழும்பில் பொருத்தப்பட்டுள்ளது. குளுக்கோமா நோயினால்பாதிக்கப்பட்டு கண்பார்வை குறைவடைவோர் மாதாந்தம் 500 ரூபாவிற்கு மேல் செலவு செய்யவேண்டியுள்ளது. எனவும் இச்சிகிச்சை வெற்றியளிக்கும் பட்சத்தில் ஆயிரக்கணக்கானோர் நன்மை (6ஆம் பக்கம் பார்க்க)

# திருச்சி மாநாட்டில் கோபாலசாமி தி.மு.க வின் செயலாளராகத் தெரிவு

## கப்பல் பயணிகள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

மார்கோ கப்பலில் திருக்கோணமலை வரை பயணம் செய்வதற்கு பதிவு செய்தவர்களை இன்று மாலை 2.00மணிக்கு முன்னதாக பருத்தித்துறைக்கு சமுகம் தருமாறு யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மேலும் இக்கப்பல் நேற்றுப் போல் காலநிலை ஓரளவு சீராக இருப்பின் புறப்பட்டுச் செல்லும் என எதிர்பார்க்கப் ( 6 ஆம் பக்கம் பார்க்க )

## கருணாநிதியை நீக்கத் தீர்மானம்! பொதுச்சபையில் பெரும்பான்மை ஆதரவு

(சென்னை)

திருச்சியில் நேற்று நடைபெற்ற திராவிட முன்னேற்றக்கழகத்தின் பொதுக்குழு கூட்டத்தில் கட்சியில் இருந்து கருணாநிதியால் நீக்கப்பட்ட வை. கோபாலசாமி கட்சியின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதேவேளை கருணாநிதியைக் கட்சித் தலைவர் பதவியில் இருந்து நீக்குவதாகவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது குறித்து நேற்று இரவு செய்தி வெளியிட்ட அகில இந்திய வானொலி திராவிட முன்னேற்றக் கழகம் நேற்று முறைப்படி பிளவுபட்டது எனவும் நேற்று திருச்சியில் நடந்த தி. மு. க வின் பொதுக் குழு கூட்டத்தில் கட்சியிலிருந்து முன்னர் நீக்கப்பட்ட வை. கோபாலசாமி கட்சியின் பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார் எனவும் தெரிவித்தது.

மேலும் அச் செய்தியில், கூட்டத்தின் பின்னர் நடைபெற்றசெய்தியாளர் மாநாட்டில் பேசிய வை. கோபாலசாமி தி.மு.க வின் 815 பொதுக்குழு உறுப்பினர்களில் நேற்றைய பொதுக்குழுக் கூட்டத்தில் 437 பேர் கலந்து கொண்டதாக தெரிவித்தார். தமது கட்சியே உண்மையான தி. மு. க. என்றும் அவர் அறிவித்தார்.

மு. கருணாநிதியை கட்சியின் தலைவர் பதவியிலிருந்து நீக்குவது என பொதுக்குழு முடிவு செய்திருப்பதாகவும் மற்றும் க. அன்பழகன், சாதிக் பாக்ஷா, ஆற்காடு வீரசாமி ஆகியோர் வெளியேற்றப்பட்டுள்ளனர் எனவும் கோபால்சாமி அறிவித்தார் எனவும் குறிப்பிட்டது.

## திருச்சி மாநாடு சட்டவிரோதமானது

### கருணாநிதி அறிவிப்பு

(சென்னை)

திருச்சியில் நேற்று வை. கோபாலசாமியினால் கூட்டப்பட்ட தி. மு. க. பொதுக்குழுக் கூட்டம் சட்டவிரோதமானது என தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார். இப் பொதுக்குழுக் கூட்டமும் கட்சியின் பொதுச்செயலராக வை. கோபாலசாமி தெரிவானதும்

## பாலஸ்தீனர்கள் போன்றே

## யுத்தம் மேலும் நீடிக்குமானால் எவரும் படையில் சேரமாட்டார்கள்

### எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு

(கொழும்பு)

பத்து ஆண்டுப் போரின் பின்னர் படையிலேசேர சிங்கள இளைஞர்கள் முன்வருகின்றார்கள் இல்லை. இன்று படையிலே சேரும் இளைஞர் தொகை குறைந்துவருகிறது. எனவே இந்த யுத்தம் பல ஆண்டுகள் நீடிக்குமானால் புதிதாக படையில் எவருமே சேரமாட்டார்கள் என எதிர்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; யுத்தம் நீடிக்குமானால் கட்டாய இராணுவ சேவையில் அனைவரையும் இணக்க வேண்டி ஏற்படும் என்றார்.

மேலும், தப்பிஓடிய படையினர் பலர் மத்திய கிழக்கில் தொழில்புரிவதாகபுலனாய்வு தகவல்கள் தெரிவிக்கின்றன. இராணுவத்தின் நலன்கள் சரியான முறையில் பேணப்படாமையினாலேயே இவர்கள் தப்பி ஓடுகின்றனர்.

இராணுவத்தின் இழப்புகளும் தோல்விகளும் பெரிதாக விளம்பரப்படுத்தப்பட்டு விமர்சிக்கப்படுவது படையினர் மத்தியில் மனத்தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எனவே படையினர் குறித்து வெளியிடும் செய்திகளில் சில விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றார்.

## செஞ்சிலுவை வாகனத்தின் சாரதி கைதானார்

(கொழும்பு)

செஞ்சிலுவைச்சங்கவாகன சாரதியொருவர் வவுனியா தடைமுகாமில் உள்ள படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடபகுதிக்கு பெண்டோர்ச் பற்றரிகளை கடத்திச்செல்ல முற்பட்டார் எனக் கூறியே இவர் கைதானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் உள்ள செஞ்சிலுவைச் சங்க தலைமை அலுவலகத்திற்கு அறிவித்து அரசு இறுதி முடிவை எடுக்கும் எனவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மலையக இளைஞர்கள்

வேற்றப்பட்டது.

இது குறித்து நேற்று இரவு செய்தி வெளியிட்ட அகில இந்திய வானொலி திராவிட முன்னேற்றக் கழகம் நேற்று முறைப்படி பிளவுபட்டது எனவும் நேற்று திருச்சியில் நடந்த தி. மு. க வின் பொதுக் குழு கூட்டத்தில் கட்சியிலிருந்து முன்னர் நீக்கப்பட்ட வை. கோபாலசாமி கட்சியின் பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார் எனவும் தெரிவித்தது.

மேலும் அச் செய்தியில், கூட்டத்தின் பின்னர் நடைபெற்றசெய்தியாளர் மாநாட்டில் பேசிய வை. கோபாலசாமி தி. மு. க வின் 815 பொதுக்குழு உறுப்பினர்களில் நேற்றைய பொதுக்குழுக் கூட்டத்தில் 437 பேர் கலந்து கொண்டதாக தெரிவித்தார். தமது கட்சியே உண்மையான தி. மு. க. என்றும் அவர் அறிவித்தார்.

மு. கருணாநிதியை கட்சியின் தலைவர் பதவியிலிருந்து நீக்குவது என பொதுககுழு முடிவு செய்திருப்பதாகவும் மற்றும் க. அன்பழகன், சாதிக் பாக்ஷா, ஆற்காடு வீரசாமி ஆகியோர் வெளியேற்றப்பட்டுள்ளனர் எனவும் கோபாலசாமி அறிவித்தார் எனவும் குறிப்பிட்டது.

# திருச்சி மாநாடு சட்டவிரோதமானது

## கருணாநிதி அறிவிப்பு

(சென்னை)

திருச்சியில் நேற்று வை. கோபாலசாமியினால் கூட்டப்பட்ட தி. மு. க. பொதுக்குழுக் கூட்டம் சட்டவிரோதமானது என தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார். இப்பொதுக்குழுக் கூட்டமும் கட்சியின் பொதுச்செயலராக வை. கோபாலசாமி தெரிவானதும் சட்ட விரோதமானது என கருணாநிதி தெரிவித்தார் இப் பொதுக் குழுக் கூட்டம் கடசியின் சட்டவிதிகளுக்கு அமைய கூட்டப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்

திருச்சியில் வை. கோபாலசாமியினால் கூட்டப்பட்ட பொதுக்குழு கூட்டத்தில் 250 உறுப்பினர்களே கலந்து கொண்டதாககூறிய கருணாநிதி இவர்கள் அனைவரும் கட்சியிலிருந்து ஏற்கனவே வெளியேற்றப்பட்டவர்கள் என்றும் குறிப்பிட்டார்.

# பாலஸ்தீனர்கள் போன்றே இலங்கைத் தமிழர் போரிடுகின்றனர்

## — கோபாலசாமி

(சென்னை)

பாலஸ்தீன விடுதலை இயக்கம் தமது சுதந்திரத்திற்காக போரிடுவது போலத்தான் இலங்கையில் தமிழர் போரிடுகின்றனர். அவ்வாறு அவர்கள் போரிடுவதில் என்ன தவறு? என வை. கோபாலசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

பாலஸ்தீன விடுதலை இயக்கமும் பல தாககுதல்களை மேற்கொண்டிருக்கின்றது. கண்டிக்கத்தக்க சில நடவடிக்கைகளை அமைப்பு செய்திருக்கிறது. ஆனால் பாலஸ்தீன கோரிக்கையில் ஒரு தவறும் இல்லை. இதைத்தான் உலகும் கூறுகிறது. இதே போன்றுதான் இலங்கையிலும் தமிழர் தமது தாய் நாட்டிற்காக போரிடுகின்றனர். அதில் என்ன தவறு? என அவர் சென்னையிலிருந்து வெளிவரும் ''புறண்ட் லைன்'' சஞ்சிகைக்கு அவர் அளித்த பேட்டியில் கேட்டுள்ளார்.

மேலும்,

''தாம் சிங்களவர்களுக்கு அடிமையாக இருக்க விரும்பவில்லை எனவும் சமாதானமாகவும் கௌரவமாகவும், சுதந்திரமாகவும் வாழவே விரும்புவதாகவும் இலங்கைத் தமிழர்கள் கூறுகின்றனர். எஸ். ஜே. வி. செல்வநாயகம் காலத்தில் தமிழ் ஈழம் கோரும் தீர்மானம் ஒன்று நிறைவேறியது. எனவே தமிழ் ஈழம் என்பது தமிழர்களின் கோரிக்கை. போராளி அமைப்பு அந்தக் கோரிக்கையை அடைவதற்காக மட்டுமே போரிடுகிறது எனவும் கோபாலசாமி அதில் மேலும் தெரிவித்தார்,

தென்னாபிரிக்காவின் ஏ. என். சி கட்சி வன்முறையில் ஈடுபடவில்லையா? ஆனால் சுதந்திரம் நோக்கிய அதன் போராட்டத்தை யாரும் தவறு என்றுகூறியுள்ளனரா? என்றும் கோபாலசாமி கேள்வி எழுப்பினார்,

# காணாமல்போனமீனவரின் சடலம் கரையொதுங்கியது

(தொல்புரம்)

சுழிபுரம் திருவடிநிலைக் கடலில் நேற்று முன்தினம் காணாமல்போன மீனவரின் சடலம் கரையொதுங்கிய நிலையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

தொழிலிற்காக கடலுக்கு சென்று கரை திரும்பாது காணாமற்போன முருகன் வேலும்மயிலும் (வயது 29) என்ற மீனவரினது சடலம் திருவடிநிலை தீர்த்தக்கரையில் நேற்றுக்காலை 5 மணியளவில் கரையொதுங்கிய நிலையில் சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த மீனவர்களினால் கண்டெடுக்கப்பட்டு சங்கானை காவல் துறையினரிடம் புகாரிடப்பட்ட பின்னர் காவல்துறையினரின் அனுசரணையுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோதனையின்பின்உறவினரிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டது. (41)

# அரசியல் திருப்பங்களை வெளியிட சிறிலங்கா அரசு தடைவிதிக்கிறது

## பத்திரிகையாளர் கண்டனம்

(கொழும்பு)

சிறிலங்காவில் பல முக்கியமான அரசியல் திருப்பங்கள் நடைபெற்று வரும்போது அரசாங்கம் செய்திகளுக்கு தடைவிதித்து இம் மாற்றங்கள் வெளிவராது இருட்டடிப்பு செய்ய முயல்கிறது என பத்திரிகையாளர் குற்றம் சாட்டியுள்ளனர்.

மாகாணசபை உறுப்பினர்கள் கடத்தல் நாடகம், மாகாணசபைகளில்கொண்டு வரப்படுகின்ற நம்பிக்கையில்லா தீர்மானங்கள் என்பன போன்ற முக்கிய அரசியல் திருப்பங்கள் ஏற்பட்டு வரும் இவ்வேளையில் அவற்றை வெளியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவ் விடயங்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு தெளிவான விளக்கத்தைக் கொடுக்க செய்தி நிறுவனங்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என பத்திரிகையாளர் குற்றம் சாட்டியுள்ளனர்.

படையிலே சேரும் இளைஞர் தொகை குறைந்துவருகிறது. எனவே இந்த யுத்தம் பல ஆண்டுகள் நீடிக்குமானால்

அவர் மேலும் கூறுகையில்; யுத்தம் நீடிக்குமானால் கட்டாய இராணுவ சேவையில் அனைவரையும் இணக்க

இராணுவத்தின் நலன்கள் சரியான முறையில் பேணப்படாமையினாலேயே இவர்கள் தப்பி ஓடுகின்றனர்.

இராணுவத்தின் இழப்புகளும் தோல்விகளும் பெரிதாக விளம்பரப்படுத்தப்பட்டு விமர்சிக்கப்படுவது படையினர் மத்தியில் மனத்தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எனவே படையினர் குறித்து வெளியிடும் செய்திகளில் சில விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றார்.

# செஞ்சிலுவை வாகனத்தின் சாரதி கைதானார்

(கொழும்பு)

செஞ்சிலுவைச்சங்கவாகன சாரதியொருவர் வவுனியா தடைமுகாமில் உள்ள படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடபகுதிக்கு பெனடோர்ச் பற்றரிகளை கடத்திச்செல்ல முற்பட்டார் எனக் கூறியே இவர் கைதானதாக தெரிவிக்கப்படுகிறது. இவர் செலுத்திவந்த வாகனத்தில் 400 பென்டோர்ச் பற்றரிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இச் சாரதியான வெளிநாட்டவரை வெளியேற்ற சிறிலங்கா அரசு முடிவுசெய்துள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்பதை வெளியிட அரசு மறுத்துவிட்டது. இச் சம்பவத்தை ஜெனீவாவில் உள்ள செஞ்சிலுவைச் சங்க தலைமை அலுவலகத்திற்கு அறிவித்து அரசு இறுதி முடிவை எடுக்கும் எனவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மலையக இளைஞர்கள் பொலிசாரல் தடுப்பு

(தெஹியோவிற்ற)

அடையாள அட்டைவைத்திருக்கும் மலையக இளைஞர்களை பஸ்களிலிருந்து இறக்கி பொலிஸ் நிலையங்களில் தடுத்துவைத்து விசாரணை செய்யப்பட்டு வருவதாக புகாரிடப்பட்டுள்ளது.

இப்படியான சம்பவம் ஹன்வல, நவகமுவ ஆகிய பொலிஸ் பகுதிகளில் அண்மைக் காலமாக அதிகரித்து வருவதாக தெரியவந்துள்ளது.

அடையாள அட்டை, மற்றும் ஆவணங்கள், தொழில் பார்க்கும் இடம் ஆகிய விபரங்களை பொலிசாரிடம் தெரிவித்தும் அவர்கள் இளைஞர்களை தடுத்துவைத்து விசாரணை செய்வதால் மலையக தோட்டப் பகுதி இளைஞர்கள இப்போது கொழும்புபோன்ற தூரஇடங்களுக்கு பிரயாணம் செய்வதை நிறுத்தியுள்ளனர்.

# விசேட அதிரடிப்படையினரால் 500 தமிழர்கள் அம்பாறையில் கைது

(அம்பாறை)

அம்பாறையில் விசேட அதிரடிப் படையினரின் கெடுபிடிகள் அதிகமாக இடம்பெற்று வருகிறது இதனால் தமிழ் மக்கள் இன்னலுக்குள்ளாகி வருகின்றனர். கடந்த 14ஆம் திகதி அம்பாறை 7ஆம் குறிச்சி விசேட அதிரடிப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு 500பேர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

அக்கரைப்பற்று ஆலையடி வேம்பு, பனங்காடு, உட்பட பல தமிழ்ப் பகுதிகளும் வாரம் இருமுறை சுற்றிவளைக்கப்படுகிறது. முகமூடிகளின் உதவியுடன் கைதுகளும் இடம்பெறுகின்றன. இரவு 7மணிக்கு பின்னர் தமிழர்கள் வீடுகளை விட்டு வெளியே செல்ல இராணுவம் தடை விதித்துள்ளது. இம் மாவட்டத்தில் தேசத்துரோக கும்பல்களின் அடாவடித்தனங்களினாலும் மக்கள் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகிவருகின்றனர்.

# வழிகாட்டல் பயிற்சி

வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கான வழிகாட்டல் பயிற்சி நெறியொன்று ஜனவரி 3ஆம் திகதி முதல் 13ஆம் திகதிவரை யாழ் பல்கலைக் கழகத்தில் நடத்தப்படவுள்ளது. இப்பயிற்சி சகல ஆண்டுகளையும் சேர்ந்த கலை வர்த்தகமாணவர்களுக்கும் நடாத்தப்படவுள்ளதென அறிவிக்கப்படுகிறது.

# மீண்டும் தாழமுக்கம்

(கொழும்பு)

கிழக்குக் கரையை அண்மித்த பகுதிகளில் மீண்டும் தாழமுக்கம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக கொழும்பு வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. வடக்கு, கிழக்கு, ஊவா, வடமத்திய மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு, தென்கரை கடல் கொந்தளிப்பாக இருக்கும் எனவும் ஓரளவு கடும் காற்று வீசும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# அரசியல்வாதிகள் தொடங்கிய யுத்தம் அவர்களே முடித்துவைக்கவேண்டும்

## பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த யுத்தத்தை தொடங்கிய அரசியல்வாதிகளே யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரவும் முயற்சி செய்ய வேண்டும். பொதுமக்கள் இந்த யுத்தத்தை தொடங்கவுமில்லை. அதனை அவர்கள் முடித்துவைக்க வேண்டியதுமில்லை. மக்களை அரசியல்வாதிகளால் தொடர்ந்து ஏமாற்றமுடியாது என சிறிலங்கா பிரதிச் சபாநாயகர் காமினி பொன்சேகா தெரிவித்தார்.

கண்டிகுயின் ஹோட்டலில் நடைபெற்ற ''இன்றைய யுத்தம்'' எனும் கருத்தரங்கில் உரையாற்றும்போது மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

இன்று மூன்று வார பயிற்சியின்பின் எமது இளைஞர்கள் யுத்தத்திற்கு அனுப்பப்படுகின்றார்கள். துப்பாக்கிகளை சரியாக பிடிக்க தெரியாதவர்கள் இவர்கள் நாளாந்தம் 50 மில்லியன் ரூபா யுத்தத்திற்காக செலவிடப்படுகின்றது.

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்

### போர்முரசம் கேட்கிறது

'போர்முரசம் கேட்கிறது' 'கொழும்பில் கல்யாணம்' நாடகங்களை எழுதித் தயாரித்த அராலியூர் ந.சுந்தரம் பிள்ளையின் வானொலி நாடகநூல், முதலாம்பிள்ளை 30|- சில பிரதிகளே உள்ளன. பூபாலசிங்கம் புத்தகசாலை.
(6791)

### பெற்றுக்கொள்ளவும்

ஸ்ரார் வாச் வேக்ஸ் ஸ்தாபனத்தில் திருத்தம் செய்ய கொடுக்கப்பட்ட உங்கள் மணிக்கூடுகளை எனது இல்லத்தில் பெற்றுக்கொள்ளவும் க. பரமேஸ்வரன் 399, கஸ்தூரியார்வீதி யாழ்ப்பாணம்.
(7021)

## பாரிய மரம் வீழ்ந்தது

மருத்துவ மனை வீதியில் நின்ற பாரிய மரமொன்று வேரோடு பெயர்ந்து வீழ்ந்ததில் மருத்துவமனை சுவர் மருத்துவ மாணவர்களின் துவிச்சக்கர வண்டிகள்- நிறுத்தும் கட்டடம் என்பன சேதமடைந்தன.

வீதியின் குறுக்காக வீழ்ந்துள்ள மரத்தினால் வீதியில் ஒரு பகுதி போக்குவரத்திற்கு தடையாக உள்ளது.

## கொழும்பு ஆயர் செய்தி

(கொழும்பு)

ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தாய்நாட்டிற்காக தமது உயிர்களை தியாகம் செய்துள்ளனர். மரித்தவர்களையும் துயரித்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தவர்களையும் பற்றிச் சிந்திக்காமல் நாம் கல்நெஞ்சத்துடன் நத்தார் தினத்தைக் கொண்டாடமுடியாது என்று கொழும்பிலுள்ள கத்தோலிக்கதிருச்சபையின் ஆயர் அதி. வண. நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை விடுத்துள்ள நத்தார் தினச் செய்தியில்குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,இந்தப் பண்டிகை மிக எளிமையாக கடைப்பிடிக்கப்பட வேண்டும். இப்பண்டிகையிலுள்ள ஆன்மீக அம்சங்களுக்கு முக்கியத்துவம் தரப்படல்வேண்டும்.

சமாதானத்திற்கான பொறுப்பை பொதுமக்கள் ஏற்கவேண்டிய தருணம் இப்போது வந்துவிட்டது. மக்களின் இந்த உன்னத குறிக்கோளை அடைவதில் வெகு

---

யா-கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை

## நூற்றாண்டு விழாக் காலத்தில்...!

### தமிழ் மொழி மூலம்

ஆண்டு 5 புலமைப் பரிசிற் பரீட்சையில்
அகில இலங்கையில் முதலிடம் பெற்ற எமது மாணவன்

**செல்வன் க. பிரகாஸ்**

பரீட்சையில் சித்தியடைந்த

செல்வன் க. தெ. செந்தூரன், செல்வி பா. பிரசாந்தி, செல்வன் ப. மயூரன், செல்வி சி. சுபாஜினி, செல்வன் இ. ரஜீவ் ஆகியோரையும் -

ஆரம்ப வகுப்பு முதல் எமது வித்தியாசாலையிற் கல்வி கற்று க. பொ. த. (சா. த) பரீட்சையில் அதிவிசேட சித்திகள் பெற்று வேறு பாடசாலைகளிற் சேர்ந்து க. பொ. த. (உ. த) பரீட்சையில் (1993) சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற செல்வன் செ.சிவானந்தன் (4A) செல்வன் சி. சாயீஸ்வரன் (3A, 1B) செல்வன் து. சுதன்சன் (1A, 3B) செல்வன் யோ. நிர்மலன் (1A, 3C) மற்றும் செல்வர்கள் க. சதீஸ், பு. பத்மேந்திரா, செல்வி யோ. நிரஞ்சலா (2B,2C) செல்வி கு. நிரோஜினி (1A,3C) செல்விகள் செ. பத்மானந்தி, ச. துர்க்காதேவி, க. சுபாஜினி ஆகியோரையும்

**வாழ்த்துகின்றோம்**

அதிபர். ஆசிரியர்கள்,
பழைய மாணவர் சங்கம்
அபிவிருத்திச்சபை - சங்கம்

யா-கந்தரோடை தமிழ்க் கந்தையா
வித்தியாசாலை,
கந்தரோடை.
(சி-8220)

---

## விற்பனைக்குண்டு

நம்பகரமான அடை முட்டை வேண்டுமா?
அடைவைப்பதற்கேற்ற

- வான் கோழி
- பெண்டம்
- பாமாஸ்
- சிவிக்கி
- காப்பிலி
- தாரா

ஆகியவற்றின் முட்டைகள் விற்பனைக்கு உண்டு.

நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

முதன்மைச் செயலகம்
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தாவடி.
(சி-8 213)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

---

வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாசம்

## அறிவித்தல்

எதிர்வரும் புதுவருடத்தை முன்னிட்டு 29-12-1993 புதன்கிழமை அனைத்து சிகை அலங்கரிப்பு நிலையங்களும் திறப்பதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

முக்கிய குறிப்பு
சமாச உறுப்பினர் சான்றுப் படிவம் நிரப்பி ஒப்படைக்கும் இறுதித்தினம் 05-01-1994 ஆகும்.

நன்றி

ச.அன்ரன் இராசநாயகம்
செயலாளர்
(7040)

---

யாழ் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம் வழங்கும்

## முழுநிலா அறிவியலரங்கு

இடம்: குமாரசுவாமி மண்டபம்
காலம்: 28.12.1993 செவ்வாய்

3.30 - 4.30

'யாழ் குடாநாட்டு நீர்வளமும் - பேணலும்'

திரு. இரா. சிவச்சந்திரன்
இணைப்பாளர் புறநிலைப்படிப்புக்கள் அலகு
யாழ் பல்கலைக்கழகம்

4.30 - 5.30

'தளைநீக்கத்திற்கான அரங்கு'

திரு. க. சிதம்பரநாதன்
நுண்கலைத்துறை விரிவுரையாளர்
யாழ் பல்கலைக்கழகம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலர்
(சி 8159)

---

## 47-ம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்
07.05.1975



தாயக மண்ணில்
11.11.1993

---

## வாழைக்குலை திருடன் சைக்கிளை விட்டு ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

வாழைக்குலை திருடவந்த திருடன் வீட்டார் சத்தமிடவே தனது சைக்கிளை கைவிட்டு தப்பியோடிவிட்டான். யாழ் புகையிரத நிலைய ஒழுங்கையில் உள்ள மனுவேற்பிள்ளை என்பவரது வீட்டில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:

அன்றிரவு அவ்வீட்டில் நின்ற வாழை மரங்களில் இருந்து குலைகளை வெட்டிச் செல்ல பிரஸ்தாப திருடன் வந்தபோது அரவம்கேட்ட வீட்டார் மாடு என்நினைத்து 'சூ', 'சூ என சத்தமிடவே பயந்து திரும்பிய அத்திருடன் சைக்கிளை எடுத்துக்கொண்டு ஓட முற்பட்டபோது சைக்கிள் கீழே விழுந்துவிட, அதனை அப்படியே விட்டு விட்டு தப்பி ஓடிவிட்டான். இதனையடுத்து இச்சைக்கிளை தமிழீழ காவல் துறையினரிடம் ஒப்படைத்துள்ள அவ்வீட்டார் இச்சம்பவம் பற்றி புகார் செய்துள்ளனர்.
(22)

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.இந்துக்கல்லூரி மாணவன்
அ.கமலஜெயனின் தந்தையாரான

**அமரர் கந்தையா அரசரட்ணம்**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

13'A' கணிதப் பிரிவு ஆசிரியர்
மாணவர்கள்
யாழ்.இந்துக்கல்லூரி
(7055)

---

## நினைவுகூருகின்றோம்...

**1993.12-27**

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் தெல்லிப்பழைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய-

**ராவ்** (மகாலிங்கம் அகிலன் - வீமன்காமம்-தெல்லிப்பழை - யாழ்)

கோப்பாய்ப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய-

**மதன்** (கந்தசாமி சிவானந்தன் - அந்தனத்திடல், கப்பூது, கரவெட்டி - யாழ்)

மட்டுநகரில் இந்தியப்படையினர் மற்றும் காவல்துறையினர் மேற்கொண்ட அட்டுழியங்களின் போது கொல்லப்பட்ட 30 தமிழர்கள். ஏறாவூர் முகாமிலிருந்து இந்தியப்படையினர் கண்மூடித்தனமாக மேற்கொண்ட எறிகணை செங்கலடி மருத்துவமனை மீது வீழ்ந்து வெடித்ததில் கொல்லப்பட்ட சிறுவன், மூதாட்டி, மருத்துவமனை ஊழியர்.

1988ஆம் ஆண்டு மட்டு- ஆரையம்பதிப் பகுதியில் தேசவிரோதிகளின் முற்றுகையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**முரளி** (பீதாம்பரம் நிக்சன் போல் - 8-ம் வாய்க்கால், உருத்திரபுரம் - கிளிநொச்சி)

பூநொச்சிமுனைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**லெப். அஜித்** (சுப்பிரமணியம் தேவராசா - ஆரையம்பதி - மட்டு)

நிக்காமல் நாம் கல்நெஞ்சத்துடன் நத்தார் தினத்தைக் கொண்டாடமுடியாது என்று கொழும்பிலுள்ள கத்தோலிக்கதிருச்சபையின் ஆயர் அதி. வண. நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை விடுத்துள்ள நத்தார் தினச் செய்தியில்குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தப் பண்டிகை மிக எளிமையாக கடைப்பிடிக்கப்பட வேண்டும். இப்பண்டிகையிலுள்ள ஆன்மீக அம்சங்களுக்கு முக்கியத்துவம் தரப்படல்வேண்டும்.

சமாதானத்திற்கான பொறுப்பை பொதுமக்கள் ஏற்கவேண்டிய தருணம் இப்போது வந்துவிட்டது. மக்களின் இந்த உன்னத குறிக்கோளை அடைவதில் வெகுஜனதொடர்பு சாதனங்களுக்கும் மிகுந்த முக்கியத்துவம் உண்டுஎன்றும் தெரிவித்துள்ளார்.

எம்மை அழித்துவரும் தீய சக்திகள் அனைத்தையும் ஒடுக்குவதற்கு யேசுவின் ஒளி எமக்கு வழிகாட்டும். சக்தியை கொடுக்கும். இந்த நத்தார் எமது நெஞ்சங்களுக்கும், நாட்டுக்கும் மக்களுக்கும் சமாதானத்தையே கொண்டு வரட்டும் என்று ஆயர் அதிவண. கென்னத் பெர்ணாண்டோ தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மெதடிஸ்த சபையின் பேராயர் அருட்திரு கிங்ஸ்லி எல்.முத்தையா விடுத்துள்ள செய்தியில் பிரச்சினைகளும் சிரமங்களும் எம்மை சூழ்ந்திருக்கலாம் ஆனால் சகலதும் நல்லவையாக மாற ஆண்டவன் வழிவகுக்கிறார் எனத் தெரிவித்துள்ளார்.

### மாவீரர் படங்கள் திரைநீக்கம்

சித்தன்கேணிகலைநகரைச் சேர்ந்த லெப்டினன்ட் மரியா (செல்வி புவனேந்திரசோதி புலேந்திரன்), 2-ம் லெப்டினன்ட் ஈஸ்வரன் (செல்வன் புஷ்பராஜா கஜேந்திரன்) ஆகியோரது பெரிய அளவிலான திருவுருவப் படங்கள் நேருஜி சனசமூக நிலைய வளவில் 27.12.93 இன்று மாலை திரைநீக்கம் செய்து வைக்கப்படவுள்ளது.

கலைநகர் நேருஜிசனசமூக நிலையத் தலைவரும், இளைப்பாறிய அதிபருமான திரு. வே. தம்பையா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளும் சங்கானை வட்டவைப் பொறுப்பாளர் திரு. மதி அவர்கள் திரை நீக்கம் செய்து வைப்பார்கள்.

சங்கானை மகளிர் வட்டவைப் பொறுப்பாளர் செல்வி தீபாவும் கலந்துகொண்டு சிறப்பிப்பார்.

---

ஆகியவற்றின் முட்டைகள் விற்பனைக்கு உண்டு.

நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

முதன்மைச் செயலகம்
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தாவடி.

(சி-8213)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வெளிவாரிபட்டப்படிப்பு கற்கைநெறிகள்

**முதல் கலை / முதல் வர்த்தகம் 1992/93**
**பொதுக்கலை பகுதி I/சிறப்புக்கலை பகுதி I/**
**வர்த்தகம் பகுதி I 1992 / 93**
**பொதுக்கலைபகுதி II/சிறப்புக்கலைபகுதி II**
**வர்த்தகம் பகுதி II 1992 / 93**
**வழிப்படுத்தும் பயிற்சி - 1**

மேற்குறிப்பிட்ட கற்கை நெறிகளுக்கு பதிவு செய்துள்ள மாணவர்களுக்கு 03-01-1994 தொடக்கம் 13-01-1994 வரை வழிப்படுத்தும் பயிற்சி யாழ்/பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெற வுள்ளது. நேர அட்டவணை விபரங்களை வெளிவாரி பரீட்சைப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம். இக்கற்கை நெறிக்கு பதிவுசெய்தசகல மாணவர்களையும் பயிற்சியில் கலந்து கொள்ளுமாறு வெளிவாரி பரீட்சைப்பகுதி இணைப்பாளர் கேட்டுக்கொள்கிறார்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

(சி-8218)

---

## 47-ம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்
07.05.1975

தாயக மண்ணில்
11.11.1993

### லெப்டினன்ட் செய்யவன் (நேரு)
**கணபதிப்பிள்ளை தங்கறூபன்**

தாய்மண்ணை மீட்கவென்று -- பெற்ற
தாய் தன்னை பிரிந்தனையே
தமிழ் மானம் காக்கவென்று — எம்
தலைவன் வழி சென்றனையே
உனக்கென்று வாழாமல் உன் இனத்திற்காய்
வாழ்ந்தாயே

உன் உயிரையும் ஈந்தாயே
அம்மாவின் மடியினிலே அன்பான றூபனாக
அண்ணாவின் வழியினிலே நேயம் மிக்க நேரு
வானாய்
மலருகின்ற ஈழத்திற்காய் மாவீரன் ஆனவனே
புலருகின்ற பொழுதினிலே புலியாக நீயாகி
மீண்டும் மலர்ந்திடுவாய் — ஈழத்திற்காய்
மீண்டும் எழுந்திடுவாய்.

பூநகரி தவளை நடவடிக்கையில் எங்கள் செல்வத்துடன் வீரச்சாவை தழுவிக்கொண்ட அனைத்து மாவீரர்களுக்கும் எமது இதய அஞ்சலிகள்.

உன்பிரிவால் தவிக்கும்
அம்மா, அண்ணாமார்
அக்காமார், அத்தான்,
அண்ணிமார், மருமக்கள்
மற்றும் உறவினர்.

பெரியபளை,
பளை. (6906)

---


## பெயர் மாற்றம்

**அன்ரன் லக்ஷா நகைப்பூங்கா**

என்னும் பெயரில் இயங்கிவந்த ஸ்தாபனம் இன்று முதல்

**கல்யாணி தங்க மாளிகை**

என பெயர் மாற்றம் செய்யப்படுகிறது என்பதை எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர் அனைவர்க்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

யாவர்க்கும் எமது
நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகுக

## கல்யாணி தங்க மாளிகை

இல. 189/A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(7041)


---

கோப்பாய்ப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய-

**மதன்** (கந்தசாமி சிவானந்தன் - அந்தனத்திடல், கப்பூது, கரவெட்டி - யாழ்)

மட்டுநகரில் இந்தியப்படையினர் மற்றும் காவல்துறையினர் மேற்கொண்ட அட்டுழியங்களின் போது கொல்லப்பட்ட 30 தமிழர்கள். ஏறாவூர் முகாமிலிருந்து இந்தியப்படையினர் கண்மூடித்தனமாக மேற்கொண்ட எறிகணை செங்கலடி மருத்துவமனை மீது வீழ்ந்து வெடித்ததில் கொல்லப்பட்ட சிறுவன், மூதாட்டி, மருத்துவமனை ஊழியர்.

1988ஆம் ஆண்டு மட்டு - ஆரையம்பதிப் பகுதியில் தேசவிரோதிகளின் முற்றுகையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**முரளி** (பீதாம்பரம் நிக்சன் போல் - 8-ம் வாய்க்கால், உருத்திரபுரம் - கிளிநொச்சி)

பூநொச்சிமுனைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**லெப். அஜித்** (சுப்பிரமணியம் தேவராசா - ஆரையம்பதி - மட்டு)

**2-ம் லெப். அர்ஜுன்** (சின்னத்தம்பி தயாளன் - ஆரையம்பதி - மட்டு)

**ராஜன்** (— தங்கராசா - மஞ்சத்தொடுவாய்-மட்டு)

புத்தூர்ப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றி வளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**நிக்கலஸ்** (சிறிமுருகன் - கூழாவடி, கொலனி)

மட்டு - மீயாங்குளம் பகுதியில் இந்தியப்படையினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**தீபன்** (கிருஷ்ணபிள்ளை சதாசிவம் - ஐயங்கேணி, ஏறாவூர்- மட்டு)

**தயான்** (சின்னத்தம்பி சக்திவடிவேல் - ஆரையம்பதி - மட்டு)

1989ஆம் ஆண்டு வவுனியா - நெளுக்குளத்தில் தேசவிரோதிகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**மிரேஸ்** (இராசலிங்கம் சதிஸ்குமரன் - தெனியம்பை - வல்வெட்டித்துறை)

1990ஆம் ஆண்டு ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**மாறன்** (சவரிமுத்து அமலதாஸ் - வட்டக்கச்சி-கிளிநொச்சி)

**செம்பவளம்** (செல்லத்துரை யாழின்பராசா - தென்னியங்குளம்-துணுக்காய்)

**லெப். குமரன்** (துரைசிங்கம் உதயகுமார்- 2-ம் வட்டாரம், புங்குடுதீவு-02)

வடமராட்சிப் பகுதியில் சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட பொதுமகன்.

1991ஆம் ஆண்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் போது எமைப்பிரிந்த-

**வில்லியம்** (கௌரி இராஜேந்திரம் - 115-ம்கட்டை - கிளிநொச்சி)

சிறிலங்கா இராணுவத்தினரின் தூண்டுதலினால் மன்னார்தீவு அகதிமுகாமிலிருந்து தேசவிரோதிகளால் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட 5 தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் ஏற்பட்ட வாகன விபத்தில் எமைப்பிரிந்த-

**2-ம் லெப். கதிர்** (ஞானகுருபரன் சுதர்சன்- சித்தன்கேணி, வட்டுக்கோட்டை - யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-8195)

# 45ஆம் நாள் நினைவலைகள்

## ஈழமே உயிராகக் கொண்டவன்

மகன் பிறந்தனன் என்றபோது நாம்
மகிழ்வடைந்தனம்; பல நினைந்தனம்
அகமகிழ்ந்துனை வவுனியாவிலும்
அமெரிக்கன் மிஷன் உடுவில் தன்னிலும்
தகுதிமிக்கவோர் வட்டுக்கோட்டையில்
தலைமை மிக்க யாழ் மத்தியில் மிக
மகிழ்வுடன் பெரும் கலை பயின்றிட
வைத்தனம் பலபரிசு பெற்றனை.

கவிதை கட்டுரை சதுரங்கம் என
காட்டினாய் திறன் ஈட்டினாய் புகழ்
அவையிலே உனைத் தந்தை வைத்தனன்
அவனை நீ பெரும் புகழில் உய்த்தனை
சபையிலே அவன் புகழை விஞ்சிடச்
சமரி லேகுதித் தமர ராகினை
இவையெலாம் புளகாங்க மூட்டினும்
இதயமென்பது உனை மறக்குமா.

ஆண்டி ரண்டுமே பறந்து சென்றன
அன்னை தந்தையை அண்ணன் தங்கையை
யாண்டு மெண்ணிவை இனிய ஈழமே
யாவு மென்றனை யாகத் தீயிலே
பூண்ட லட்சியம் தலைவன் என்றுநீ
போட்ட கொள்கையில் உறுதி பூண்டனை
ஈண்டுன் தந்தையை சகோத ரங்களை
இனிய தாயினை விஞ்ச எண்ணினை

எங்கு சென்றனை என்ன ஆகினை
ஈன்ற வள்துயர் பெரிது மைந்தனே
வெங்க ளத்தில்நீ வீரமாடிய
வெற்றி யார்வந்து சொல்லு வாரடா
எங்க ளின்அவா ஒன்று மைந்தனே
எப்ப டிப்பகை வென்றொ ழித்திட
அங்கு நீசெயற் பட்டனை; அதை
யார் உரைத்திட வல்லர் என்பதே.

குழந்தை தன்பிள்ளை என்று எண்ணினான்
தம்பி தன்பிள்ளை ஆக்கிக் கொண்டனன்
அழகு மிக்க தமிழ் ஈழ அன்னையோ
அணைத்துமே சொந்த மைந்தன் ஆக்கினள்
இளமையிற் பெரும் செயல் புரிந்தனை
ஈழமே உயிராகக் கொண்டனை
களங்க மற்ற நீகளம் புகுந்துமே
காவியம் படைத்து யர்ந்து விட்டனை.

- கவிஞர் காரை. சுந்தரம்பிள்ளை

## சீரார்ந்த சிவகுமாரா

சென்றுவா மகனே! வீணரை வென்றுவா
மகனே - என
களம் அனுப்பிக் காத்திருந்தோம்
வீணர்கள் வீழ்ந்தனர் - புலிகள்
வெற்றியும் பெற்றனர் - தமிழன்னை
நெற்றியில் உன் குருதி கலந்த
வெற்றித் திலகம்... நீண்ட விடுதலைப் பயணத்தில்
நிலைத்துவிட்ட உன் நினைவு... மாறாது
மறையாது
சீரார்ந்த சிவகுமாரா!

- திருமதி எஸ். அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி



# 2-ம் லெப். சிவகுமாரன்

## குழந்தைவேலு சத்தியேந்திரா (பவா)

வேலணை - கொக்குவில்.

எங்கள் பிள்ளையாய்:
29. 12. 1975

வேங்கையின் மைந்தனாய்:
18- 01- 1992

மண்ணின் மைந்தனாய்;
13- 11- 1993



## விழிகளில் வீசும் வீரம்

இன்று தமிழ் மண்ணின் மீட்புக்கான வீரப்போரிலே பங்குகொண்டு தன் கடமையைச் செவ்வனே செய்து முடித்த மாவீரன் சிவகுமாரனை மனத்தில் இருத்தும் நாளாகும். களம் சென்று வீரனாக விண்ணுலகு சென்ற அவன் நினைவை எமது உள்ளத்திலே அழியாத ஓவியமாகத் தீட்டி வைக்கும் பொன்னான நாள. பெற்றவர் பெருமைகொள்ள மற்றவர் வியந்து நோக்க மாவீரன் சிவகுமாரன் நம் மனக் கண்களிலே நிற்கிறான். சீருடையே சிங்காரமாக எதிரியின் அழிவே இலக்காகப் போரிடச் சென்ற அவன் வீரக்கோலம் பலர் காணாதது. ஆனால் பங்காளி வீரர்கள் பார்த்தது. எமக்குப் பார்வைக்கென வந்தது கண்ணாடிச் சட்டமிட்ட நிழற்கோலமே. மாவீரனைப் போர்க் கோலத்தில் காணமுடியவில்லை. நிழற்கோலத்திலே தான் பார்க்கிறோம். அதனையே நெஞ்சில் நிறுத்தி விடுவோம்.

நிழற்கோலமாய் நிற்பவன் கண்கள் கூறும் வீரக்கதைகளை நின்று கேட்போம். ஒரே பார்வை. ஆனால், ஓராயிரம் வீரக்கதைகளின் கருக்களை வெளிப்படுத்தும் அந்தக் கருவிழிச் சுடர்க்கனலின் வெம்மையில் நாம் அவனோடு நெருங்கிநின்று கதை கேட்கவே விரும்புகிறோம். விழிச்சுடர்க் கனலில் தெறித்துவரும் வீரச்சுடர்கள் இருட்டில் வெளிச்சம் காட்டும் விண்மீன்கள். தமிழ் மக்களின் இன்னல் கடக்க உதவும் கைவிளக்குகள். தமிழர் நடைபாதையின் தடைகளைக் களைய இந்தக் கை

## நடுகல் ஆயினனே!



எம் நட்புக்குரிய குழந்தைவேலு தம்பதிகளின்மகன் சத்தியேந்திரா இரண்டாம் லெப்டினன்ட் சிவகுமாரனாகப் பூநகரிப் போரிலே வீரச்சாவு அடைந்தபோது தமிழ் மக்கள் எல்லோருடைய பிள்ளையாக ஆகிவிட்டான். 20.12.1993 அன்று அவனுக்கு நடுகல் நாட்டிய போது அவன் எம் பண்பாட்டுக் கேற்றபடி நாம் வணங்கும் தெய்வமாகிவிட்டான் இந்த வேளையிலே, பொத்தியார் என்னும் புறநானூற்றுப் புலவர்,

"[illegible] நடுகல் ஆயினன் புரலவன்"

என்று கூறிய பாடலடிதான் என் நினைவுக்கு வருகின்றது சத்தியேந்திரா தன் சொந்தநலனுக்காகவன்றி, பிற தமிழ் மக்களுக்காகத் தன் உயிரைத் தற்கொடையாக்கியுள்ளான்; தமிழ் மண்ணின் மீட்புக்காகமாவீரனாகியுள்ளான்; தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு தன்னை ஈந்துள்ளான். இவையாவும் "புரவலன்" என்னும்சொல் குறிக்கும் 'ஈகையாளன், கொடையாளி' ஆகிய பொருளுக்கு அமைந்தனவாயுள்ளன. எங்கள் மண்ணில்தம்மைத் தற்கொடையாளிகளாக்கி தமிழ் மக்கள் யாவரையும் இன்றும் இனி வரும் காலங்களிலும் கடமைப் பட்டவர்களாக ஆக்கிவிட்ட மாவீரர்கள் வரிசையிலே எங்கள் பிள்ளை சத்தியேந்திராவும் சேர்ந்து கொண்டான்.

"தவம் செய்வார் தம் கருமம் செய்வார்" என்னும் வள்ளுவனுடைய கூற்றுக்கேற்றபடி எத்தனையோ இளமைத்துய்ப்புகளையெல்லாம் துறந்து "இக்கடமையைச் செய்" என்று யாரும் கூறாமலே, தானாகவே தன்னைஇப்பொதுநலக்கடமைக்குட்படுத்தி, ஓர் ஒழுங்கமைப்புக்குள்ளிருந்துபணியாற்றி, தன்குடும்பத்துக்காக, தன் உறவினர்க்காக அன்றி எல்லோருக்குமாக வீரச்சாவைத் தழுவி இன்று நடுகல்லாகச் சத்தியேந்திரா நிற்கிறான்- இவனும் இவன்போன்ற மாவீரர்களும் எம் வணக்கத்துக்குரியவர்கள். இவர்களுடைய தன்னாட்டு உணர்வும் கடமையுணர்வும் எங்களை வழிநடத்தவல்லன. எமக்கெனவுள்ள கடமைகளை எம் நலனுக்காகவன்றி பிறருடைய நலன்களுக்காக ஆற்றவேண்டிய கடமைப்பாட்டை இப்பிள்ளைகள் எமக்கு நினைவூட்டியுள்ளனர்.

பேராசிரியர்: அ. சண்முகதாஸ்
(தலைவர் தமிழ்த்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.)

## ஆராதனை...

இன நலம்,
வள நலம்,
நில நலம்
பிற நலம்
தாயக
நேயம
போயுயர்
ஒயுதல்
இணைந்து
அணைந்தும்
தானும்

ஏற்ற
எல்லாம்
ஒன்றே
யாவும்
மண்மீட்
தாக
பெட்பொடு
இன்றித்
வீர
அணையா
சரித்திர

தனநலம்,
வாய்ப்பாய்
நினைப்பாய்க்
பின்னே
பொன்றே
நிமிர்ந்து
பூந
'தவளைத்
காவியம்
மாவீ
நாயக

குடும்ப
இருந்தும்;
களை;
ஒதுக்கி;
தாகமாய்;
களத்தில்
கரியில்
தாக்கில்'
படைத்த
ரருடனே'
னாகி,

அணைத்துமே சொந்த மைந்தன் ஆக்கினை
இளமையிற் பெரும் செயல் புரிந்தனை
ஈழமே உயிராகக் கொண்டனை
களங்க மற்ற நீகளம் புகுந்துமே
காவியம் படைத்துயர்ந்து விட்டனை.

- கவிஞர் காரை. சுந்தரம்பிள்ளை

## சீரார்ந்த சிவகுமாரா

சென்றுவா மகனே! வீணரை வென்றுவா
மகனே - என
களம் அனுப்பிக் காத்திருந்தோம்
வீணர்கள் வீழ்ந்தனர் - புலிகள்
வெற்றியும் பெற்றனர் - தமிழன்னை
நெற்றியில் உன் குருதி கலந்த
வெற்றித் திலகம்... நீண்ட விடுதலைப் பயணத்தில்
நிலைத்துவிட்ட உன் நினைவு... மாறாது
மறையாது
சீரார்ந்த சிவகுமாரா!

- திருமதி எஸ். அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி

## சுதந்திர ஒளி பாய்ச்சிய
## சுடர் விளக்கே

கலை வளமும் அலை வளமும் பெற்று
கல்வியிற் சிறந்த தமிழீழ மண்ணிலே
இன்னல்உறும் தமிழ் மக்கள்
இருண்ட வரலாற்றிற்கு சுதந்திர ஒளி பாய்ச்சிய
சுடர் விளக்கே
முத்தமிழ் அறிந்த ஆசானின் மைந்தனே
புலிக்கொடி தொடுத்து பூநகரி சமரில் பொன்னடி
பதித்த வீரனே உனை என்றும் மறவோம்

யாழ் மாவட்ட
கமநல சேவை நிலைய
உத்தியோகஸ்தர் சங்கம்

## மத்தியின் மைந்தன்

மத்தியின் மைந்தன் சத்தியேந்திரா
உத்தம வீரனாய் எழுந்து கனன்று
வெங்களமாடிப் பூநகரியில்
சிங்களப் படையை சிதற அடித்து
வித்தாய் விழுந்து விதைத்தான் வீரம்
பற்றொடு நின்று எம் தமிழ் ஈழம்
பெற்றிட நிற்போர் பெரும் பேறடைவார்.
இத்தகு மரபில் எத்தனை புலிகள்
சித்தம தாகத் தீரத்துடனே
மாவீரராகி மாண்பினைப் பெற்றார்.
அத்தனை பேரும் வாழ்க! வாழ்க!

மாணவர்கள்
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

புலோப்பளைச் சமரில் வீரச்சாவைத் தழுவிய
புலிவீரர் நினைவாக
## 2ஆம் லெப். சிவகுமாரன்
பதித்துச் சென்ற வாசகம்

**கல்லறையில் அடைக்கப்பட்ட**
**சமாதிகள் அல்ல நீங்கள்**
**மாறாக களமாடி எதிரி தலை கொய்த**
**நிலம் காத்த வீரகாவிய நாயகர்கள்**
**உங்கள் பணி நாம் தொடர்வோம்**
**இது உறுதி...**

*சிவகுமாரன்*
*(9 - 11 - 1993)*

## விழிகளில் வீசும் வீரம்



இன்று தமிழ் மண்ணின் மீட்புக்கான வீரப்போரிலே பங்குகொண்டு தன் கடமையைச் செவ்வனே செய்து முடித்த மாவீரன் சிவகுமாரனை மனத்தில் இருத்தும் நாளாகும். களம் சென்று வீரனாக விண்ணுலகு சென்ற அவன் நினைவை எமது உள்ளத்திலே அழியாத ஓவியமாகத் தீட்டி வைக்கும் பொன்னான நாள. பெற்றவர் பெருமைகொள்ள மற்றவர் வியந்து நோக்க மாவீரன் சிவகுமாரன் நம் மனக் கண்களிலே நிற்கிறான். சீருடையே சிங்காரமாக எதிரியின் அழிவே இலக்காகப் போரிடச் சென்ற அவன் வீரக்கோலம் பலர் காணாதது. ஆனால் பங்காளி வீரர்கள் பார்த்தது. எமக்குப் பார்வைக்கென வந்தது கண்ணாடிச் சட்டமிட்ட நிழற்கோலமே. மாவீரனைப் போர்க் கோலத்தில் காணமுடியவில்லை. நிழற்கோலத்திலே தான் பார்க்கிறோம். அதனையே நெஞ்சில் நிறுத்தி விடுவோம்.

நிழற்கோலமாய் நிற்பவன் கண்கள் கூறும் வீரக்கதைகளை நின்று கேட்போம். ஒரே பார்வை. ஆனால், ஓராயிரம் வீரக்கதைகளின் கருக்களை வெளிப்படுத்தும் அந்தக் கருவிழிச் சுடர்க்கனலின் வெம்மையில் நாம் அவனோடு நெருங்கிநின்று கதை கேட்கவே விரும்புகிறோம். விழிச்சுடர்க் கனலில் தெறித்துவரும் வீரச்சுடர்கள் இருட்டில் வெளிச்சம் காட்டும் விண்மீன்கள். தமிழ் மக்களின் இன்னல் கடக்க உதவும கைவிளக்குகள். தமிழர் நடைபாதையின் தடைகளைக் களைய இந்தக் கைவிளக்குகள் காலம் தோறும் எம் கரத்திலே நின்று பணியாற்றும்- நாம் போகும் பாதையெல்லாம் துணைவரும் எமக்குப் பின்னே இந்த மண்ணில் வாழப்போகும் இன்றைய இளம் பிஞ்சுகளுக்கும் வழிகாட்டியாய் நின்றுதவும்.

மாவீரனின் விழிச்சுடரில் தெரிந்த கேள்வி என் உள்ளத்திலே ஆழப் புகுந்து கொண்டது. ‘இன்னும் ஏன் காலதாமதம்’ என்னைக் கேட்கும் கேள்வியாக அல்லாமல் எல்லோரையும் அந்த வீரன் கேட்கும் கேள்வி. தமிழர் வீரம் பற்றிப் பழம் பெருமை இன்னும் பேசவேண்டுமா? அன்றையமறத்தமிழன் வழிவந்த நாம் வாளா இருக்கலாமா இன்று ஒவ்வொரு தமிழ மகனும் தமிழ் மகளும் தன் பணியைச் செவ்வனே செய்ய வேண்டாமா? கருவிழிச் சுடரின் கனல் வீசாத மௌனமான கேள்விகள் இவை கண்களின் மொழியினைப் புரிந்து கொண்டவர்கள் மட்டுமே விளங்கிக் கொள்வர். மற்றவர் பார்வையில் படாத இந்த வீரனின் விழிகள் கூறும் கதைகள் வெறுங்கதைகளாகி விடக்கூடாது. தொடரும் பணிக்கான அன்புக் கட்டளைகளாக ஆவணம் பெறவேண்டும். ஒரு மாவீரன்; சிவகுமாரன்; தமிழ் மொழியின் பணியால் அன்பு நிலையான சுற்றமானவன். அவன் பெற்றோர்என் சுற்றத்தவர் ஆகினர்- அவரோடு நானும் இணைந்து பணிசெய்ய அவன் அன்புக் கட்டளையும் என்னைப் பிணித்துக் கொண்டது-

தமிழர்கள் வீரம் உலகறிய வீரப்பணிசெய்த மாவீரன் ஒவ்வொருவனைப் பற்றியும் இலக்கியம் படைக்க வேண்டும்- அவன் வாழ்வு குறுகியது- ஆனால் வாழ்க்கை நெறியோ நீண்டது- நடுகல் நாட்டி அவனை வணக்கத்துக்கு உரியவனாக்கி விட்டோர்- வணங்கத்தக்கவன் என அவனை நாம் கொண்டாட அவன் நமக்கு என்ன செய்தான்? வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான் என வள்ளுவன் வகுத்த இலக்கணம்தான் மாவீரனுக்கு நன்கு பொருந்தும் நல்லிலக்கணம்- எனவே மாவீரர் அனைவரையும் பற்றி அவர் வாழ்வு நெறி பற்றிக் காலத்தால் அழியாத காவியங்கள் படைக்க வேண்டும்- அவர்களைப் பற்றிப் பின்னவர் நேர்மையான தகவல்களைப் பெறவேண்டும்- ‘மாவீரன்’ என்ற அவன் பெருமை காலச் சுழற்சியிலே மாசுபடாமலிருக்க நாம் செய்யக் கூடிய சிறிய பணி இதுவே- பிறநாடுகளிலும் வீரர்களைப் பற்றிய செய்திகளைப் பல்வேறு இலக்கிய வடிவமாக ஆவணப்படுத்தும் முறை நடைமுறையில் உண்டு- இது எமக்கு புதிதல்ல- எமது வீரப் பாடல்களான புறநானூற்றுப் பாடல்கள் 2500 ஆண்டுகளுக்கு முன்பே செய்த அரும்பணி போரிலே வீரசாவு அடைந்தவர்களைப் புனிதமான பணியிலே நின்றவர் எனப் பெருமைப்படுத்திக் கோவிலிலே தெய்வமாக வைத்து வணங்கும் மரபு யப்பானிலும் உண்டு- தோக்கியோவிலுள்ள ‘யசுகுநி’’ ஆலயம் இதற்குச் சான்று- விண்ணில் வாழும் தெய்வங்களை நாம் மண்ணில் காண மாவீரர் ஆலயம் தேவை- வீரரின் விழிகளில் வீசும் வீரம் எம் உள்ளத்திலே பொறியாக வந்து தழுவவேண்டும்- சிவகுமாரன் விழிகள் சொல்லும் கதைகள் மட்டுமல்ல. மண்ணை மீட்கவெனப் போரிட்டு வீரச்சாவு அடைந்த அத்தனை வீரர்களது விழிகள் சொல்லும் கதைகளைக் கேட்க அவர்களை வணங்க எம் மனங்களிலே அந்த மாவீரர்கள் அழியாத கோலங்களாகி விடுவர்-

திருமதி ச. மனோன்மணி
(ஆய்வாளர் கச்சுயின் பல்கலைக்கழகம் யப்பான்)

## மண்மீட்புக்கு அவன் தேவை

விதியின் சதியல்ல
விளையாட்டுத் தனமுமல்ல - அவன்
மதியின் செயலாகும்
மண்மீட்புக்கு அவன் தேவை

உயர் கலைக் கல்லூரி
ஆனைப்பந்தி.

**வாழ்வில் நேசித்த நாம்**
**மரணத்திலும் நேசிப்போம்**

...ளுடைய தன்னாட்டு உணர்வும் கடமையுணர்வும் எங்களை வழிநடத்தவல்லன. எமக்கெனவுள்ள கடமைகளை எம் நலனுக்காகவன்றி பிறருடைய நலன்களுக்காக ஆற்றவேண்டிய கடமைப்பாட்டை இப்பிள்ளைகள் எமக்கு நினைவூட்டியுள்ளனர்.

பேராசிரியர்: அ. சண்முகதாஸ்
(தலைவர் தமிழ்த்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.)

## ஆராதனை...

| | | | |
|---|---|---|---|
| இனநலம், | ஏற்ற | தனநலம், | குடும்ப |
| வளநலம், | எல்லாம் | வாய்ப்பாய் | இருந்தும்; |
| நில நலம் | ஒன்றே | நினைப்பாய்க் | கலை; . |
| பிற நலம் | யாவும் | பின்னே | ஒதுக்கி; |
| தாயக | மண்மீட் | பொன்றே | தாகமாய்; |
| நேயம | தாக | நிமிர்ந்து | களத்தில் |
| போயுயர் | பெட்பொடு | பூந | கரியில் |
| ஓயுதல் | இன்றித் | ‘தவளைத் | தாக்கில்’ |
| இணைந்து | வீர | காவியம் | படைத்த |
| அணைந்தும் | அணையா | மாவீ | ரருடனே’ |
| தானும் | சரித்திர | நாயக | னாகி, |
| ஊனும் | உயிரும் | தமிழ்மண் | ணுக்கே |
| உரமாய்த் | தந்து, | தமிழர் | மானம் |
| சிரமேற் | கொண்டு | சென்றான் | வென்றான் |
| நானூற் | றைம்பத் | தெட்டு | வேங்கைகள் |
| பாநூ | றேத்தும் | வீர! | மறவராய் |
| தமிழீ | ழப்போர்ப் | பரணியில் | ஒளிர்வர் |
| தமிழோ | டென்றும் | தழைத்து | வாழ்வர் |
| இவர்கள் | ஈட்டிய | ஈடிலாப் | பெரும்புகழ் |
| எவர்க்கும் | வீர . | உணர்வினை | ஊட்டுக |
| உவக்கும் | வகையில் | உறுதிகொண் | டெழுதலே |
| அவர்க்கு | நாம்செயும் | ஆரா | தனைகளாம் |

- முருகனடியான்

## இளமகனே சிவகுமாரா...

பேச்செல்லாம் தமிழென்றும் என்
மூச்செல்லாம் தமிழ் என்றும் வெறுங்
கூச்சலாய் அல்லாது தமிழன்னை
ஆட்சியே வேண்டுமென்று — தன் மகனை
போருக்கு அனுப்பி வைத்த புறநானூற்று
புகழ் மணக்கும் எம் தமிழ் ஆசான் இளமகனே
இளமகனே சிவகுமாரா — உன்வீரப்
புகழ் நினைந்து புல்லரித்து நிற்கின்றோம்.

வெளிவாரிப் பட்டதாரி மாணவர் ஒன்றியம்
புதிய உயர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## சத்திய வேள்வியில்
## ஆகுதி ஆனாய்

சட்டத்தரணியாக்க சத்தியேந்திரா என்று
சூட்டி பெயர் வைத்தான் அப்பன் - அவன்
சித்தம் நிறைந்த சிவனும், யேசுவும்,
புத்தரும் புனித அல்லாவும் கூடியே
சத்திய வேள்வியில் ஆகுதி ஆக்கினர்

வட பிராந்திய
- சுருட்டுத் தொழிலாளர் சங்கம் -

## எங்கள் பவா,..

பவாவின் திடீர் மறைவை கேட்டதுமுதல் ஆற்றொணாத்துயரிலும் மனவேதனையிலும் உட்பட்டு உள்ளோம். இவ்வளவு கெதியில் பெரிய ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவார் என கனவிலும் எண்ணியிருக்கவில்லை. அவரது இளமைத் துடிப்பும், உணர்வுகளும் பெற்றோர் பாசத்தையும், உடன் பிறப்புகளின் பற்றையும் மிஞ்சி தமிழுக்கு தன்னுயிரை ஈனும் தற்கொடையாளியாக்கி விட்டது. பவாவின் கதைகளும் அவனது சாகசங்களும் நினைக்க நினைக்க மனதில் இனிக்கும். எல்லோருடனும் சரளமாக பழகும் திறமையும் மலர்ச்சியுடன் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் சுபாவமும் அவனுக்கென்றே உரித்தானவை. பவாவின் இளம் ஆத்மா சாந்தி அடைய வேண்டுமென நாங்கள் எல்லோரும் ஒருமித்து வேண்டுகின்றோம்

பா. க. ப. குடும்பத்தினர்

(இ8215)

## நெஞ்சை விட்டகலா நினைவு



மண்ணில்
ஒருவனாக:
03 . 03 . 74

மாவீரரில்
ஒருவனாக:
27 . 12 . 92

## 2-ம் லெப். கதிர்
### (ஞானகுருபரன் சுதர்சன்)
### திதி: 14 01-94

மண்ணின் மீட்புக்காய்
உன்னை கொடுத்தவனே - எம்
எண்ணத்தில் என்றும் நீ

ஐயனார் வீதி,
சண்டிலிப்பாய். (6969)

வ. செல்லத்துரை (பேரன்)
மற்றும் குடும்பத்தவர்

## 45-ம் நாள் நினைவஞ்சலி



முத்தாக
16. 6. 975

வித்தாக
13.11.1993

## லெப்டினன்ட் நேரியன்
### (கந்தையா ஜெகதீசன்/ஈசன்)

அன்னையை பிரிந்து தந்தையை மறந்து
ஆருயிர் தம்பியர் தம்மையும் துறந்து
அண்ணனின் பாசறை தன்னை அடைந்து
ஆயுதக் கலையினை கசடறக் கற்று
அமைப்போம் அடித்தளம் தமிழ்ஈழத்திற் கென
ஆயிரக் கணக்கில் வேங்கைகள அணி அணியாக
அர்த்த ராத்திரியில் தவளைப்பாய்ச்சலில் பூநகர்ஏகி
அரக்கர் முகாமினை அடியோ டழித்து
ஆயுதம், ராங்கிகள், விசைப்படகுகள் என அள்ளி
குவித்த

அகிலம் போற்றும் காவியச் சமரில்
ஆகுதியாகிய நானூற்றைம்பத்தெண்மரில் ஒருவனாகிய
அப்பனே! எம் ஈசனே! லெப்டினன்ட் நேரியனே!

## 31-ம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு:
18 09.1972



உதிர்வு:
27.11.1993

## திருமதி இராஜபூபதி கனகசிங்கம்

ஓ ...ராசாத்தியே
நினையாத நேரம் அணைந்த ஒளிவிளக்கே
மீண்டும் வரும் நினைவலையாய் உருகிநிற்கும்
எம் முள்ளம் எந்நாளும் உம்மையே எண்ணும்
உம் பிரிவால் ஏங்கும் எம்துயர் பாரும் ராசாத்தியே

அன்னாரின் அந்தியேட்டி சபிண்டீகரண நிகழ்வு இன்று 27-12-93இல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்

குடமியன்,
வரணி. (சி-8222)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
### மாணிக்கம் இராசலிங்கம்
(இளைப்பாறிய அதிபரும், பத்திரிகை நிருபரும்)
சாவகச்சேரி

மண்ணில்: 14-01-1925 விண்ணில்: 06 01-1993
திதி: 27.12.1993

அன்பால் அரவணைத்த என் தெய்வமே!
எங்கள் தந்தையே!
ஏற்றமுடன் வாழ வழி வகுத்த எழிலுருவே!
ஆறாது எங்கள் கண்ணீர் ஓராண்டும் சென்றதுவே!
இதயத்தில் இருத்தியே மனமுருகி, மலர் தூவி
இறைஞ்சுகின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

''கமல பவனம்''
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
27.12.1993

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.
(7038)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

### வீரவேங்கை கப்டன் கிர்மானி
(துரைராசா சிவராஜ்குமார்)
(செங்குந்தா கல்லூரி பழைய மாணவன்)

தாயின் மடியில் தாயக மண்ணில்

## புறநிலைப்படிப்புகள் அலகு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
EXTRA MURAL STUDIES UNIT,
UNIVERSITY OF JAFFNA.

புறநிலைக்கற்கை நெறிகள்:-
*Extra - Mural Courses*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகு பின்வரும் தலைப்புகளில் பொது விரிவுரைத் தொடர்களையும் அடிப்படைக் கற்கை நெறிகளையும் 1994ஆம் ஆண்டு நடத்தவுள்ளது. சனி, ஞாயிறு தினங்களில் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள இக்கற்கை நெறிகளைப் பயில்வதற்கு கல்வித் தகைமை சான்றிதழ் எதுவும் தேவையில்லை. 18 வயதிற்கு மேற்பட்ட ஆர்வலர்கள் எவரும் தமது முகவரியுடன் கூடிய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் சுயமாகத் தயாரிக்கப்பட்ட அனைத்து விபரங்களையும் கொண்ட விண்ணப்பப் படிவம் மூலம் பொது விரிவுரைத் தொடர், அடிப்படைக் கற்கை நெறி ஆகியவற்றின் தலைப்பைக் குறிப்பிட்டு தனித்தனியாக விண்ணப்பிக்கவும்

(அடிப்படைக் கற்கைநெறிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மாத்திரம் பதிவுக்கட்டணமாக ரூபா 100/-செலுத்த வேண்டும்.)

01 பொது விரிவுரைத் தொடர்கள் (குறைந்தது 20 மணித்தியாலங்கள்)
(Series of Public Lectures)
1.1 இசைரசனை
(Appreciation of Music)
1.2 நலவாழ்வு
(A Healthy Life)

02. அடிப்படைக் கற்கை நெறிகள் (குறைந்தது 40 மணித்தியாலங்கள்)
Foundation Courses:
2.1 பொது வாழ்வில் பிரயோக எந்திரப் பொறியியல்
(Applied Mechanical Engineering in Common Life)
2.2 உணவு பதனிடல் தொழில் நுட்பம்
(Food Processing Technology)
2.3 உணவகங்களின் முகாமைத்துவம்
(Management of Restaurants)
2.4 வீட்டுப்புறக் கோழி வளர்ப்பு
(Backyard Poultry)
2.5 மீன்பிடியியல்
(Fisheries)
2.6 வாழிடமும் வாழ்வும்
(Households and Welfare)
2.7 உடற்கல்வி
(Physical Education)
2.8 தொடர்பியலுக்கான ஆங்கிலம்
(English For Communication)
2.9 திரைப்பட இரசனை
(The Film Appreciation)
2.10 ஆடைத்தொழில் நுட்பம்
(Apparel Industry)
2.11 விவசாய உற்பத்தித்திறன் மேம்பாடு
(Increasing Agricultural Productivity)
2.12 நாளாந்த வாழ்வில் தாதிப்பராபரிப்பு அறிவு
(Nursing Knowledge In day to day Life)

புலமை சான்றோர்: (Resource Persons)
மேற்படி தலைப்புகளில் நடைபெறவுள்ள கற்கை

## சமைத்த உணவு விநியோகம்

தற்போது பெய்துவரும் பெருமழை காரணமாக தீவக மக்கள் குடியிருக்கும் முகாம்களில் சிலவான சாம்சன், டயஸ், மணியரசன் நக்கீரன் நாவற்குழி ஆகிய முகாம்களில் உள்ள மக்கள் குடியிருப்புக்களில் குடியிருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இடம்பெயர்ந்து அருகில் உள்ள பாடசாலைகள், தேவாலயங்கள் ஆகியவற்றில் தங்கியிருந்தனர். இவ்வாறு தங்கியிருந்த மக்களுக்கு தீவகக் கோட்ட கூட்டுறவு ஒன்றியமும், தீவக மக்கள் நலன்காக்கும் கழகமும் இணைந்து உடன் சமைத்த உணவுகளை கடந்த 21, 22, 23, ஆகிய திகதிகளில் வழங்கி உள்ளனர். மேற்படி முகாம்களில் மழை நீர் உட்புகுந்துள்ளதால் அங்கு குடியிருக்கவோ சமைக்கவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் முகாமில் உள்ள பல பள்ளமான இடங்களில் அசுத்தநீர் தேங்கி நிற்பதாலும் நோய்பரவும் அபாய நிலையும் ஏற்பட்டுள்ளது.

## உள்ளூர் பிரசுர கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் வெளியிடப்படுகின்ற உள்ளூர்ப் பிரசுரங்களின் ஒவ்வொன்றிலும் சுமார் ஆறு பிரதிகளை யாழ் மாநகர சபை கொள்வனவு செய்துவருவதாக யாழ் மாநகர சபை ஆணையாளர் தெரிவித்தார்

தேவை ஏற்படும்போது உள்ளூர்ப் பிரசுரங்களை ஊக்குவிப்பதற்கும் தாம் மேலும் ஆறு வரையிலான உள்ளூர்ப் பிரசுரங்களைக் கொள்வனவு செய்யமுடியும் எனவும் அதற்குமேல் கொள்வனவு செய்ய இயலாமல் உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்

இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட பிரசுரங்கள் யாழ் மாநகர சபையின் நூலகத்தில் தாம் வாசகர்களுக்காகப் பத்திரப்படுத்திவைத்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார் (பா)

## வெள்ளத்தால் பாதிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மீண்டும் மழை பெய்யத் தொடங்கியிருப்பதையடுத்து தென்மராட்சிப் பகுதியில் மீண்டும் வெள்ளப்பாதிப்பு ஏற்பட்டுள்ளது இதனால் மக்கள் இடம்பெயரவேண்டிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

பளை, கிளாலி, அல்லிப்



வித்தாக
13.11.1993

## லெப்டினன்ட் நேரியன்
### (கந்தையா ஜெகதீசன்/ஈசன்)

அன்னையை பிரிந்து தந்தையை மறந்து
ஆருயிர் தம்பியர் தம்மையும் துறந்து
அண்ணனின் பாசறை தன்னை அடைந்து
ஆயுதக் கலையினை கசடறக் கற்று
அமைப்போம் அடித்தளம் தமிழ்ஈழத்திற் கென
ஆயிரக் கணக்கில் வேங்கைகள அணி அணியாக
அர்த்த ராத்திரியில் தவளைப்பாய்ச்சலில் பூநகர்ஏகி
அரக்கர் முகாமினை அடியோ டழித்து
ஆயுதம், ராங்கிகள், விசைப்படகுகள் என அள்ளி
குவித்த

அகிலம் போற்றும் காவியச் சமரில்
ஆகுதியாகிய நானூற்றைம்பத்தெண்மரில் ஒருவனாகிய
அப்பனே! எம் ஈசனே! லெப்டினன்ட் நேரியனே!
ஆக்கையும் கண்டிலோம் எங்குற்றாய் எங்குற்றாய்
எங்குற்றாயோ!

மறவன்புலோ மேற்கு, அப்பா, அம்மா, தம்பியர்
சாவகச்சேரி. (6941) உறவினர், நண்பர்கள்.

---

## 47-ம் நாள் அஞ்சலி



தாயின் மடியில்:
25-08-1973

ஈழமண்ணில்
விதைப்பு:
11-11-1993

### மேஜர் குமரவேல்/குமரேஸ்
### (மைக்கல் அன்ரனி)

அன்னை தந்தை பெரிதுவந்த சேயாய்
அன்பின் ஆசானுக்கு நல்மா ணாக்கனாய்
அண்டியவர்க்கு அருமருந்தாய் வாழ்ந்த நீ,
அண்ணனின் இலட்சி யத்தில் கட்டுண்டாய்.

காலமெல்லாம் நாம்கண்ட கனவை நனவாக்கவே
கோலங் கொண்டாய் — பூந கரியிலே
ஞாலங்காணா வீரச்சமரில் வென்றீர், அந்தோ!
விலங்கறுத்து தோழருடன் வீரகாவியமானீர் ஐயா!

''உமதான்மா இறைவனின் சமாதானத்தில்
இளைப்பாறுவதாக.''

27-12-93 இன்று எமதில்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் சகபோராளிகளையும், நண்பரனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பெற்றார்

43A, மொறிஸ் வீதி,
கொய்யாத்தோட்டம். (7030)

---

ஆறாது எங்கள் கண்ணீர் ஓராண்டும் சென்றதுவே!
இதயத்தில இருத்தியே மனமுருகி; மலர் தூவி
இறைஞ்சுகின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

''கமல பவனம்'' மனைவி, மக்கள்,
மட்டுவில் தெற்கு, மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சாவகச்சேரி. உற்றார், உறவினர்கள்.
27.12.1993 (7038)

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

### வீரவேங்கை கப்டன் கிர்மானி
### (துரைராசா சிவராஜ்குமார்)
(செங்குந்தா கல்லூரி பழைய மாணவன்)

தாயின் மடியில் தாயக மண்ணில்
24-08-73 20-12-91

திதி: 27-12-93

எரிமலை பீறிடும் திருமலையில் பிறந்தாய்
இலட்சியப்புயலென புலியுடன் இணைந்தாய்
யாழ்ப்பாணக்களத்தினில் பாப்பாடி. பயின்றான்
வாழ்க்கையினை மூதூரில்வாழ்வுக்கு வளமாக்கினான்
நீ சிந்திய இரத்தம நெருப்பில் எரியவில்லை, எம்
நெஞ்சில் அனலாய் எரிகின்றது

உன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர், உறவினர்.

கிருபாகரன் வீதி,
கல்வியங்காடு. (7025)

---

## 44-ம்நாள் நினைவஞ்சலி



தாயக மண்ணில்
13-05-1971

தமிழீழ மண்ணில்
14-11-1993

### மேஜர் தென்றல்மாறன்/கமிலோ
### (நவரத்தினம் கருணைவேல்)

காலத்தின் நகர்வில் கரைந்தது நாட்கள்
கண்ணோடு வழிகின்ற நீர் மட்டும் மாறவில்லை-
கண்ணா
அன்பாலே எம்மனதை மூழ்கடித்த கமிலோவே
காரணத்தைச் சொல்லாது நீகனவாகிப்போனதேன்!
காலங்கள் எத்தனைதான் கரைந்தாலும்
இனிய உன் நினைவு எம் இதயத்தால் மறந்திடுமோ!

ஜெரி குடும்பத்தினர்.

நுணாவில் கிழக்கு,
பெரியதம்பிரான் கோவிலடி,
சாவகச்சேரி. (6984)

---

2.3 உணவகங்களின் முகாமைத்துவம்
(Management of Restaurants)
2.4 வீட்டுப்புறக் கோழி வளர்ப்பு
(Backyard Poultry)
2.5 மீன்பிடியியல்
(Fisheries)
2.6 வாழிடமும் வாழ்வும்
(Households and Welfare)
2.7 உடற்கல்வி
(Physical Education)
2.8 தொடர்பியலுக்கான ஆங்கிலம்
(English For Communication)
2.9 திரைப்பட இரசனை
(The Film Appreciation)
2.10 ஆடைத்தொழில் நுட்பம்
(Apparel Industry)
2.11 விவசாய உற்பத்தித்திறன் மேம்பாடு
(Increasing Agricultural Productivity)
2.12 நாளாந்த வாழ்வில் தாதிப்பராமரிப்பு அறிவு
(Nursing Knowledge In day to day Life)

புலமை சான்றோர்: (Resource Persons)

மேற்படி தலைப்புகளில் நடைபெறவுள்ள கற்கை நெறிகளில் புலமை சான்றோராகப் பணியாற்ற விரும்பும் பல்கலைக்கழகத்திற்கு வெளியேயுள்ளவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட படிவத்தில் தங்கள் தகைமை விபரங்களைக் குறிப்பிட்டு புறநிலைப் படிப்புகள் அலகிற்கு விண்ணப்பிக்கவும்.

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

புறநிலைப்படிப்புகள் அலகு,
யாழ்ப்பாணம்.
23-12-1993 (சி-8214)

---

செய்யமுடியும் எனவும் அதற்குமேல் கொள்வனவுசெய்ய இயலாமல் உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்

இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட பிரசுரங்கள் யாழ் மாநகர சபையின் நூலகத்தில் தாம் வாசகர்களுக்காகப் பத்திரப்படுத்திவைத்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார் (பா)

### வெள்ளத்தால் பாதிப்பு
(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மீண்டும் மழை பெய்யத் தொடங்கியிருப்பதையடுத்து தென்மராட்சிப் பகுதியில் மீண்டும் வெள்ளப்பாதிப்பு ஏற்பட்டுள்ளது இதனால் மக்கள் இடம்பெயரவேண்டிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

பளை, கிளாலி, அல்லிப்பளை பண்டிதர் குடியிருப்பு வரணி பகுதிகளில் மிகவும் மோசமாக வெள்ளம் ஏறட்டிருப்பதால் குடிமனைகள் பெரிதும்பாதிக்சப்பட்டுள்ளன செம்மணி பாதையில்வெள்ளம் வீதியையும் மூடிப்பாய்கிறது சாவகச்சேரியிலும் குடியிருப்புக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன (86)

---

## தொழிற் பயிற்சிகள்

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் எலக்ரோனிக் துறையில் தொழில் வாய்ப்புப் பெறக்கூடிய முறையில் பயிற்சியளிக்கப்படுகின்றன.

### ∴ றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்

சகல இன றேடியோ ரெலிவிசன், வீடியோ டெக் தொழிற்படும் முறைகள் பழுதுகள் திருத்தப்படும் முறைகள் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

காலம் : 8 மாதம்

### ∴ றீவைன்டிங்

டைனமோ, ரான்ஸ்போமர், மோட்டர் றீவைன்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.

காலம் : 5 மார்தம்

### ∴ மோட்ட பைசிக்கிள் மெக்கானிசம்

நீர் இறைக்கும் இயந்திரம், மோட்ட பைசிக்கிள் திருத்தப்படும் முறைகள் விளக்கமாகப் பயிற்சியளிக்கப்படும்.

காலம் : 4 மாதம்

**பயிற்சிகள் ஆரம்பம் : 05.01.94** (கிழமை நாட்கள்)
**சனி, ஞாயிறு வகுப்பு : 09.01.94**

விபரங்களிற்கு:

**JAFFNA Technical Institute**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(றெயில்வே கடவை அருகாமை மேல்மாடி)
(சி-8206)

சிந்தனைக்கு

ஓநாய்களுடன் வாழ்ந்தால், நீ ஊளையிடக் கற்றுக் கொள்வாய். - ஸ்பானியப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 27-12-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

## பிரேமதாசாவிற்கு டி.பி. சளைத்தவரல்ல

சட்டங்கள் எப்பொழுதும் மக்களின் பாதுகாப்பிற்கெனவும், அவர்களின் அடிப்படை உரிமைகள், சுதந்திரம் என்பனவற்றை உறுதி செய்யும் நோக்கிலேயே உருவாக்கப்படுபவை. ஆனால், சிறிலங்கா அரசிலோ சட்டங்கள் என்பவை ஆட்சியாளரைப் பாதுகாக்கும் நோக்கிலும், மக்களின் அடிப்படை உரிமைகளை பறிக்கும் நோக்கிலுமே உருவாக்கப்படுபவையாகவும் பயன்படுத்தப்படுபவையாகவும் மாறியுள்ளன.

சிறிலங்கா அரசாங்கம் பத்துவருடங்களுக்கு மேலாக - சில மாதங்கள் தவிர - அவசர கால விதியின் கீழ் நாட்டை நிர்வகித்துவரும் அரசாங்கமாகும். அவசர கால வசதியானது மக்களின் அடிப்படை உரிமைகளை மறுக்கின்ற படியினாலேயே அவ்விதி உருவாக்கப்படும் போது ஒரு மாதத்திற்கு மட்டும் என கால அளவு கொண்டதாக உருவாக்கப்படுவது வழமை. ஆனால், சிறிலங்காவில் இன்று மாதாமாதம் அவசர கால விதியினை நிறைவேற்றுவதற்காகவாவது பாராளுமன்றம் கூடவேண்டிய நிலை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசு மக்கள் விரோதச் சட்டங்களை உருவாக்கத் தொடங்கியது இன்று நேற்றல்ல. தமிழருக்கு எதிராக பல தாசாப்தங்களின் முன்பே சிறிலங்கா அரசு மக்கள் விரோதச் சட்டங்களை உருவாக்கத் தொடங்கிவிட்டது. தனிச் சிங்கள மொழி மசோதா கூட ஒரு வகையில் மக்கள் விரோதச் சட்ட மூலம் தான்.

ஆனால், 1977ஆம் ஆண்டிற்குப் பின்னர், சிறிலங்கா அரசாங்கம் தமிழருக்கு எதிராக என்ற ரீதியில் உருவாக்கிய மக்கள் விரோதச் சட்டங்கள், ஜனநாயக உரிமைகளை மட்டுமல்ல, தனிமனிதனின் அடிப்படை உரிமைகளையே பறிப்பவையாகும். இதில் முக்கியமான சட்டமாக உருவாகியது, பயங்கரவாதத் தடைச்சட்டமாகும்.

ஆனால், அன்று சிறிலங்கா அரசாங்கம் கொண்டு வந்த மக்கள் விரோதச் சட்டங்களை சிங்கள அரசியல் வாதிகளோ, பத்திரிகைகளோ கண்டுகொள்ளவில்லை. அவை தமிழருக்கு எதிரான சட்டவிதிகள் என்ற ரீதியில் மட்டுமே அவர்களின் கண்களில்பட்டன. இதனால், இச் சட்ட விதிகளுக்கு பகிரங்க ஆதரவு தெரிவிப்பவர்களாக அரசியல்வாதிகள், பத்திரிகையாளர்கள் எனப் பலர் இருந்தனர்.

இந்நிலையானது 1987ஆம் ஆண்டு வரையிலுமே

# டி.பி.விஜேதுங்கவின் பேரினவாத அரசியல் முகம்

# சிங்கள தலைமைத்துவத்திற்கு சான்றாகிறது!

இந்த உலகின் மிகப் பெரிய துயரம் என்னவென்றால் எல்லாமே ஏற்கனவே சொல்லப்பட்டிருந்தாலும் ஒவ்வொரு முறையும் திரும்பவும் முதலிருந்தே சொல்ல வேண்டியநிலை இருப்பது தான் என்று கூறப்படுவதுண்டு. இப்போது டி. பி.விஜேதுங்கவிற்கு இக்கூற்று முற்றிலும் பொருத்தமாகிவிட்டது. இதுவரை காலமும் தோன்றாத தலைமையொன்று இப்போதுதான் தோன்றியிருப்பது போலவும் இப்படிப்பட்டதொரு தலைமைக்காகத்தான் இதுவரைகாலமும் சிங்கள இனம் காத்துக் கிடந்தது போலவும் தோன்றும் வண்ணம் புதிய சனாதிபதி தோற்றமளிக்கிறார். சுத்தச்சிங்களவன் என்றும் அவருக்கு இப்போது நற்சான்றிதழ் வழங்கப்படுகின்றது. தமிழீழ மக்களைப்பொறுத்தவரையில் முக்கியமான காலகட்டமொன்றிலே அவர்களது விடிவைப் பொறுத்தவரையில் முக்கியமான பாத்திரமொன்றை இவர்வகிக்கப்போகிறார் ஏனெனில், பகுத்தறிவிற்கும் பரந்த மனப்பான்மைக்கும் உண்மைக்கும்உலகநியதிக்கும் புறம்பாக மறுதலிப்பாக மாறுபட்ட நிலைப்பாடு ஒன்றை கைக்கொள்ளும்டி.பியின் காலகட்டம் மிக வித்தியாசமானதாக அமையப் போவதற்கான அறிகுறிகள் யாவுமே இப்போது தென்படத்தொடங்கிவிட்டன.

சிங்கள அரசுக்கு வேண்டாத தொல்லையாக மாறிவிட்ட மாகாணசபை குத்துவெட்டுக்களோ கிழக்கில் தேர்தலொன்றை திணிக்க முயலும் டி. பி. யின்முனைப்புக்களோ அல்லது தொண்டாவின் அரசியல் நிலைப்பாடுகள்வெற்றிகரமான அவரது கடைசி நிமிட பின் வாங்கல்களோ எல்லாமே தமிழீழ மக்களைப் பொறுத்தவரையில் இரண்டாம் பட்சமானவைதான், என்றாலும் பல்லாண்டு காலமாக முன்னெடுக்கப்படும் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் நீண்டகால விளைவுகளின் வெளிப்பாடுகளாக இவை அமைவதால்இங்கு இவை பற்றிசுட்டிக்காட்டப்படவேண்டியுள்ளது ஏனென்றால் குளிக்

தமிழீழத் தேசியப் பிரச்சினைக்கு தீர்வுகாணப்போய் சிங்களவர்க்கு மாகாணசபையை பெற்றுக்கொடுத்த பெருமை சிங்களத் தலைமைக்கே சேரும் அல்லவா சிறிலங்கா அரசியல்எவ்வளவு கீழ்த்தரமாக கேவலமாக ஜனநாயக கேலிக் கூத்தாக மாறிவிட்டது என்பதனை மாகாணசபை ஆட்கடத்தல்களும் ஆளுநர்மாரின் அலங்கோலங்களும் மிகத் தெளிவாக்கி விட்டன. மெல்லெனப் பாயும் நீர் கல்லையும் உருக்குவதுபோல் படிப்படியாக உறுதியாக முன்னெடுக்கப் படும்விடுதலைப் போராட்டம் சிங்கள அரசியலில் அடித்தளத்தையும் அதன் தூணாக இருக்கும் இராணுவ கட்டமைப்பின் உயிர்நாடியையும் நிலைகுலையச் செய்யும் என்பதற்கு இவையெல்லாம் தக்க உதாரணங்களாகும்.

வடகிழக்கு இணைப்பில்லை, சலுகைகள் எதுவும் வழங்குவதற்கில்லை, இனப் பிரச்சினையே இல்லை என தமிழரைப் பொறுத்தவரை எல்லாமே இல்லைப்பாட்டுப் பாடும் டி. பி. அவர்கள் ஒளிவு மறைவின்றி முகமூடி போடாமல் சிங்கள பேரினவாத அரசியல்வாதிகளின் உண்மை முகத்தினைப் பிரதிபலிப்பதும் நன்மைக்குத்தான். ஏனென்றால் அப்போதுதான் காலம் காலமாக சிங்களத் தலைமை இவ்வாறுதான் இருக்கிறது என்பதற்குஇதைவிடவேறுசான்றுகூற வேண்டுமா என்ன? பழைய நாடகமாயினும் ஒரு புதிய காட்சியை டி. பி. இப்போதுசேர்த்திருக்கிறார். கண்டிய மேட்டுக்குடியாளரான டி. பி. காலம் காலமாக கண்டியச் சிங்கள மக்கள் அடக்கியொடுக்கப்பட்டது போலவும் முன்னர் ஆங்கிலேயர் கண்டியில் நிலங்களை அபகரித்ததை காரணம் காட்டியும் தற்போது இந்நிலங்கள் யாவும் மலையகத் தமிழ்மக்கள் வசமிருப்பது போலவும் சித்திரித்து பாவனை காட்டுகிறார். நூற்றாண்டு கால வரலாற்றினை புதைக்கப் பார்க்கும் இவர்கள் சொல்ல வருவது என்ன? மத்திய மாகாணத்தில் மலையகத்தமிழர்ஆதிக்கம் பெருகுகின்றதாம். யாழ்ப்பாணத்

ழர்கள் பெரும்பான்மையாக வாழும்நுவரெலியாவில்தமிழ் மணம் கமழ்கிறதாம். இப்படியிருக்கிறது கதை, மலையக மக்கட்கு பிரசாவுரிமை, வாக்குரிமை வழங்கப்பட்டது. அவர்களைஎப்போதும் ஐ.தே கட்சிக்கே வாக்களிக்கப் பண்ணி அதன் மூலம் தன்னைநிலைநிறுத்த முயலும் தொண்டாவிற்குஇப்போக்கு சற்று மிரட்சியை கொடுத்திருக்கக்கூடும்: இருக்கும் நாடே சொந்தநாடு. இருக்கும் மண்ணே சொந்த மண் என மலையக மக்கள் இப்போது நினைக்கத் தொடங்குவதும் தமது சிக்கல்களை தாமே தீர்க்க முற்படுவதும் சிங்கள அரசுக்கு மட்டுமல்ல தொண்டாவிற்கும் உவப்பான காரியமாக இருக்க முடியாது. எனவே மலையக மக்கள் அதிருப்தியை காட்ட

### வே. பாலகுமாரன்

தமது சொந்த வாழ்வின் துயரங்களை சுமைகளை மாற்ற வழிதேட முற்படும் போது அதனைஇனவாதமாக்க டி.பி முனைகிறார். தொண்டாவே நிலைமைகளின் தீவிரத்தை தணிக்க 300 நாள் வேலை, குடியிருப்புக்கள் சொந்தமாக்கப்படல், உள்ளூர் நிறுவனங்கட்கு மீண்டும் தோட்ட நிர்வாகங்களை கொடுக்காதிருத்தல் என கோரிக்கைகளை முன் வைக்கிறார். எனவே அடிப்படையை பார்க்கும் பொழுது டி.பியும் தொண்டாவும் ஒரே நலன்களை பிரதிபலிக்கிறார்கள். ஏனென்றால் தேயிலை தோட்ட உரிமையாளர் என்ற வகையில் தொண்டாவிற்கும் மலையகத்தில் சிங்கள அரசால் பாதுகாக்கப்படவேண்டிய நலன்கள் உள்ளது. எனவே தோசை சுடுவதற்குதயாராக இருப்பதுபோல் எப்போதும் தோசைக்கல்லைசூடாகவைத்திருப்பதுதான் அவர்களது அரசியல் என மூத்த சிங்கள பத்திரிகையாளர்ஒருவர்குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது. இவ் அரசியல் ஒன்றும்

யானது அல்ல. காலம் காலமாக ஒடுக்கப்பட்டு வரும் மலையக மக்களை அரசியல் விழிப்புணர்வுபெறாமல்வைத்திருக்கவே வெவ்வேறு திசைகளில் சனாதிபதியும் அமைச்சரும்முனைவது நாம்சொல்ல வேண்டிய செய்தியாகும். எனவே மலையகம் பற்றிய டி.பியின் இனவாத பல்லவியும் அதற்கு சற்று மறுப்பாக அமையும் தொண்டமானின் பல்லவியும் இப்படியே தொடரும்.

ஆனால் இங்கு வியப்புக்குரிய விடயம் ஒன்று உண்டு. காமினி திசாநாயக்காவை தனது அரசியல் எதிரியாக இதுவரை காலமும் கருதிய தொண்டா, தொண்டாவை நாயின் காதில் இரத்தம் குடிக்கும் நாயுண்ணியாக வர்ணித்த காமினி இருவரும் இன்று ஒன்று சேர்ந்திருக்கும் வியப்புத்தான் இது. டி.பியோடு உறவை சீர்படுத்திய பின்னரும் காமினியை மத்திய மாகாண முதலமைச்சர் ஆக்குவேன் என தொண்டா கூறிவருவதன் மர்மம் என்ன? இதற்கான சரியான பதிலை தொண்டாஇதுவரை கூறாத போதும் அவர் இறுதியாக இந்தியாவிலிருந்து திரும்பிய பின்னர் தன்னிலை விளக்கமாக விடுத்த அறிக்கையில் பதில் மறைந்திருக்கிறது. அவ்வறிக்கையில் அவர் அழுத்திக் கூறுவது பிரேமாவின் காலத்திலேயே தோட்ட நிர்வாகங்களை தனியார் நிறுவனங்களுக்கு கையளிப்பதை தானே முதலில் வரவேற்றதாகவும் ஆனால் உள்ளூர் நிறுவனங்களுக்குக் கொடுப்பதை தான் கடுமையாக எதிர்த்ததையும் குறிப்பிட்டுள்ளார் அப்போது இந்தியாவின் தனியார் நிறுவனங்கள் பல தோட்டநிர்வாகங்களை பொறுப்பெடுக்க விரும்பியதற்கு சிங்கள பேரினவாதிகள் கடும் எதிர்ப்புக் காட்டியிருந்தமை

யில் தராக்கி என்கிற அரசியல் விமர்சகர் குறிப்பிட்டது போல் தொண்டா அண்மைக் காலமாக காட்டிவரும் சலசலப்புகளுக்கு பின்னே மலையக மக்கள் நலன்கள் பற்றிய அக்கறை மட்டுமல்ல இந்தியக் கம்பனிகள் நலன்கள் பற்றிய அக்கறைகளும் உண்டு என்று குறிப்பிட்டதை நாம் கவனத்தில் கொள்ள முடியும். எனவே சோழியன் குடும்பி சும்மாவாக ஆடாது. இப்பொழுது நாம் இந்தியாவின் பரம விசுவாசியான காமினி இலங்கைக்கு அடுத்தபடியாக தேயிலை உற்பத்தியாக்கும் இந்தியா தேயிலைத் தோட்ட உரிமையாளரும் மலையகத் தொழிற்சங்கத் தலைவரான தொண்டா என மூன்று தரப்பையும் இணைத்துப்பார்க்க முடியும்.

தமிழீழ மக்களைப் பொறுத்தவரையில் காலத்துக்குக் காலம் அவர்கள் முன்னே தோன்றி சிங்களப் பேரினவாதம் என்னும் குதிரையில் ஏறிப்பாய்ச்சல் காட்டிய பலரை அறிவர். தமிழர்களின் தோலில் செருப்பைத் தைத்துப் போடுவேன் என்ற ஆர். ஜி. சேனநாயக்கா, குண்டர்களை ஏவி தமிழர்களைக் கொன்றொழித்த சிறில்மத்தியூ போர் என்றால் போர் என்று கொக்கரித்த ஜே ஆர். இந்தியா இங்குவர பதினாறு நிமிடங்கள்எடுக்கும் என்றால் பதினாறு செக்கனில் தமிழர்களை அழித்துவிடுவேன் என்ற காமினி திஸநாயக்கா, இதே வரிசையில் அத்துலத்முதலி. றஞ்சன் விஜயரட்னா, பிரேமதாசா. அண்மையில் புலிகளின் கழுத்து எமது கையில் என்று கூறிய சிசிலும் ஏறிச் சறுக்கிய குதிரையில் இப்போது ஏறியிருக்கும் டி. பி. சிலகாலம் அதில் சவாரி செய்யக்கூடும். எனவே இன்று தமிழீழமக்கள் தலைவர் பிரபாகரன் அவர்கள்மாவீரர் தினச் செய்தியில் குறிப்பிட்டதுபோல் தமிழரின் நியாயமான உரிமைகளை டி. பியின் சிங்கள அரசு வழங்கும் நிலையிலும் இல்லை. அவர்களிடம் கேட்டு பெறும் நிலையில் தமிழீழ மக்களும் இல்லைஎன்பது நிதர்சனமான உண்மை யல்லவா?

கூட ஒரு வகையில் மக்கள் விரோதச் சட்ட மூலம் தான்.

ஆனால், 1977ஆம் ஆண்டிற்குப் பின்னர், சிறிலங்கா அரசாங்கம் தமிழருக்கு எதிராக என்ற ரீதியில் உருவாக்கிய மக்கள் விரோதச் சட்டங்கள், ஜனநாயக உரிமைகளை மட்டுமல்ல, தனிமனிதனின் அடிப்படை உரிமைகளையே பறிப்பவையாகும். இதில் முக்கியமான சட்டமாக உருவாகியது, பயங்கரவாதத் தடைச்சட்டமாகும்.

ஆனால், அன்று சிறிலங்கா அரசாங்கம் கொண்டு வந்த மக்கள் விரோதச் சட்டங்களை சிங்கள அரசியல் வாதிகளோ, பத்திரிகைகளோ கண்டுகொள்ளவில்லை. அவை தமிழருக்கு எதிரான சட்டவிதிகள் என்ற ரீதியில் மட்டுமே அவர்களின் கண்களில்பட்டன. இதனால், இச் சட்ட விதிகளுக்கு பகிரங்க ஆதரவு தெரிவிப்பவர்களாக அரசியல்வாதிகள், பத்திரிகையாளர்கள் எனப் பலர் இருந்தனர்.

இந்நிலையானது, 1987ஆம் ஆண்டு வரையிலுமே இருந்தது. பயங்கரவாதத் தடைச்சட்டமும், ஏனைய மக்கள் விரோதச் சட்டங்களும் 1988ஆம், 1989ஆம் ஆண்டிலும், அதற்குப் பின்னரும் தென்னிலங்கையில் பிரயோகிக்கப்பட்டபோதுதான், இச்சட்டங்கள் தமிழருக்கு மட்டும் எதிரானவை என்பதல்ல, சிங்கள மக்களுக்கும் எதிரானவை என்று கண்டு கொண்டனர்: ஆனால், அது காலம் கடந்த ஞானமாகவே இருந்தது.

இருப்பினும், பிரேமதாசாவின் மரணத்துடன்இந்நிலையில் ஓரளவு மாற்றம் வரலாம் என்றேதென்னிலங்கையில் பலர் கருதினர். ஆனால், மீண்டும்டி.பி.விஜேதுங்கவினால் அவசரகால சட்டவிதிகள்பிரகடனப்படுத்தப்பட்டமையானது. அவர்களை ஏமாற்றம் கொள்ளச் செய்துள்ளது. இந்நிலையானது, பிரேமதாசா மட்டுமல்ல எந்த சிங்கள ஆட்சியாளரும் தமது ஆட்சி அதிகாரத்தை காப்பாற்றிக் கொள்ள மக்கள் விரோதச் சட்டங்களைப் பயன்படுத்த தயாராகவுள்ளனர் என்பதையே காட்டுவதாகவுள்ளது.

இதன் வெளிப்பாடு போன்றே தற்பொழுது தென்னிலங்கையில் அரசிற்கு எதிராக உருவாகிவரும் அரசியல் சூழ்நிலையை மக்கள் விரோதச் சட்டத்தின் மூலம் டி.பி. விஜேதுங்க அரசாங்கம் அடக்க எடுத்துள்ள முயற்சியாகும். வடக்குப் போர் முனையில் தொடர்ச்சியாக ஏற்பட்ட தோல்விகளும், தென்னிலங்கையில் மாகாண சபைகளை அபகரிக்க அரசாங்கம் மேற்கொண்ட ஜனநாயக விரோத நடவடிக்கைகளும் அரசாங்கத்தின் மீது மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. அரசிற்கெதிராக மக்கள் ஆத்திரமடைந்துள்ளனர். இந்நிலையில்தான், மேலும் இவை தொடர்பான தகவல்கள் மக்களிடம் சென்றடைவதையும், மக்கள் இதற்கெதிராக அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுவதையும் தடுக்கவும் அரசாங்கம் மீண்டும் அவசர கால சட்டவிதிகளின் கடும் பிரமாணங்களை பிரகடனம் செய்துள்ளது.

இதனைத் தொடர்ந்தே, மீண்டும் 'பிரேமதாசா யுகம்' ஒன்று சிறிலங்காவில் உருவாகுமோ என்ற அச்சத்தினால், எதிர்க்கட்சியினரும் பத்திரிகையாளர்களும் அரசிற்கு எதிராகக் கண்டனங்களைத் தெரிவிக்கத் தொடங்கியுள்ளனர்; ஆனால், இது எந்தளவிற்கு நன்மை பயக்கும், டி. பி. விஜேதுங்க எந்தளவு செவிசாய்ப்பார் என்பது கேள்விக்குரியதே. ஏனெனில், ஆட்சி அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்கு முன்னாள் ஜனாதிபதிகளான ஜே. ஆர். ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாசா ஆகியோரைவிட தான் எந்தவகையிலும் குறைந்தளவு முயற்சிகளை மேற்கொள்ளப்போவதில்லை என்பதையே டி. பி. விஜேதுங்க தனது கடந்த ஆறுமாத கால ஆட்சியில் நிரூபித்துள்ளார்.

டாத தொல்லையாக மாறிவிட்ட மாகாணசபை குத்து வெட்டுக்களோ கிழக்கில் தேர்தலொன்றை திணிக்க முயலும் டி.பி. யின்முனைப்புக்களோ அல்லது தொண்டாவின் அரசியல் நிலைப்பாடுகள்வெற்றிகரமான அவரது கடைசி நிமிட பின் வாங்கல்களோ எல்லாமே தமிழீழ மக்களைப் பொறுத்தவரையில் இரண்டாம் பட்சமானவைதான், என்றாலும் பல்லாண்டு காலமாக முன்னெடுக்கப்படும் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் நீண்டகால விளைவுகளின் வெளிப்பாடுகளாக இவை அமைவதால்இங்கு இவை பற்றிசுட்டிக்காட்டப்படவேண்டியுள்ளது ஏனென்றால் குளிக்கப்போய் சேறுபூசியதுபோல் பழைய நாடகமாயினும் ஒரு புதிய காட்சியை டி. பி. இப்போதுசேர்த்திருக்கிறார். கண்டிய மேட்டுக்குடியாளரான டி. பி. காலம் காலமாக கண்டியச் சிங்கள மக்கள் அடக்கியொடுக்கப்பட்டது போலவும் முன்னர் ஆங்கிலேயர் கண்டியில் நிலங்களை அபகரித்ததை காரணம் காட்டியும் தற்போது இந்நிலங்கள் யாவும் மலையகத் தமிழ்மக்கள் வசமிருப்பது போலவும் சித்திரித்து பாவனை காட்டுகிறார். நூற்றாண்டு கால வரலாற்றினை புதைக்கப் பார்க்கும். இவர்கள் சொல்ல வருவது என்ன? மத்திய மாகாணத்தில் மலையகத்தமிழர்ஆதிக்கம் பெருகுகின்றதாம். யாழ்ப்பாணத்திற்கு அடுத்தபடியாக தமி

...த்தல் என கோரிக்கைகளை முன் வைக்கிறார். எனவே அடிப்படையை பார்க்கும் பொழுது டி.பியும் தொண்டாவும் ஒரே நலன்களை பிரதிபலிக்கிறார்கள். ஏனென்றால் தேயிலை தோட்ட உரிமையாளர் என்ற வகையில் தொண்டாவிற்கும் மலையகத்தில் சிங்கள அரசால் பாதுகாக்கப்படவேண்டிய நலன்கள் உள்ளது. எனவே தோசை சுடுவதற்குதயாராக இருப்பதுபோல் எப்போதும் தோசைக்கல்லைசூடாகவைத்திருப்பதுதான் அவர்களது அரசியல் என மூத்த சிங்கள பத்திரிகையாளர்ஒருவர்குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது. இவ் அரசியல் ஒன்றும் எமது மக்களுக்கு புதுமை

...விளக்கமாக விடுத்த அறிக்கையில் பதில் மறைந்திருக்கிறது. அவ்வறிக்கையில் அவர் அழுத்திக் கூறுவது பிரேமாவின் காலத்திலேயே தோட்ட நிர்வாகங்களை தனியார் நிறுவனங்களுக்கு கையளிப்பதை தானே முதலில் வரவேற்றதாகவும் ஆனால் உள்ளூர் நிறுவனங்களுக்குக் கொடுப்பதை தான் கடுமையாக எதிர்த்ததையும் குறிப்பிட்டுள்ளார் அப்போது இந்தியாவின் தனியார் நிறுவனங்கள் பல தோட்டநிர்வாகங்களை பொறுப்பெடுக்க விரும்பியதற்கு சிங்கள பேரினவாதிகள் கடும் எதிர்ப்புக் காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அண்மை

...றஞ்சன் விஜயரட்ணா, பிரேமதாசா. அண்மையில் புலிகளின் கழுத்து எமது கையில் என்று கூறிய சிசிலும் ஏறிச் சறுக்கிய குதிரையில் இப்போது ஏறியிருக்கும் டி. பி. சிலகாலம் அதில் சவாரி செய்யக்கூடும். எனவே இன்று தமிழீழமக்கள் தலைவர் பிரபாகரன் அவர்கள்மாவீரர் தினச் செய்தியில் குறிப்பிட்டதுபோல் தமிழரின் நியாயமான உரிமைகளை டி. பியின் சிங்கள அரசு வழங்கும் நிலையிலும் இல்லை. அவர்களிடம் கேட்டு பெறும் நிலையில் தமிழீழ மக்களும் இல்லைஎன்பது நிதர்சனமான உண்மையல்லவா?

# நிதி அமைச்சர் ராஜினாமா ஏற்கப்படின் பொருளாதாரத்தில் பாதிப்பு ஏற்படலாம்

(டில்லி)

நிதியமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங்கின் இராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட்டால் அதனால் இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் பாதிக்கப்படலாம் என்று இந்திய பொருளாதார விவகாரத்துறை மற்றும் தொழிற்துறை நிபுணர்கள் கருத்து வெளியிட்டு உள்ளனர்.

சர்வதேச சமூகத்தின் நன்மதிப்பை டாக்டர் மன்மோகன் சிங் பெற்றுக்கொண்டுள்ளவர் என்றும், அவரது இராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட்டால் சர்வதேச வாணிப சமூகத்தின் நம்பிக்கை ஆட்டம் கண்டு விடும் என்றும், சர்வதேச வாணிப சபையின் தலைவர் ஹரி சங்கர் சிங்கானியா கருத்துக் கூறியுள்ளார்.

இந்தியாவின் ஏற்றுமதி அபிவிருத்தி வாணிப, தொழில் அமைப்புக்களின் தலைவர்களும் இத்தகைய கருத்துக்களையே கூறியுள்ளனர்.

உலக அளவில் இந்தியாவிற்கு அங்கீகாரம் கிடைக்கவும், உள்ளூரில் போட்டியுணர்வை ஏற்படுத்தவும் டாக்டர் மன்மோகன்சிங் பதவியில் தொடர்ந்து இருப்பது அவசியமானது எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# மன் மோகன் சிங்கின் ராஜினாமாவை ஏற்ககூடாது

## காங்கிரஸ் பா. உ. கள் வற்புறுத்தல்

(டில்லி)

நிதி அமைச்சரின் இராஜினாமாவை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்று கூட்டுப் பாராளுமன்ற விசாரணைக் கமிட்டியில் அங்கம் வகித்த காங்கிரஸ் கட்சியின் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் பி. வி. நரசிம்மராவிடம் வற்புறுத்திக் கேட்டுள்ளனர்.

எனினும் நிதி அமைச்சரின் இராஜினாமா சரியானதொரு நடவடிக்கையேஎன்று வர்ணித்த சி பி. ஐ. (எம்) கட்சியினர் பங்குபத்திர ஊழல்தொடர்பான கூட்டுப் பாராளுமன்றக் கமிட்டி குற்றம் சாட்டிய ஏனைய அமைச்சர்களும் பதவி துறக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள ஜனதாதள் கட்சி கூட்டுப் பாராளுமன்றக் குழுவின் விசாரணையின் அடிப்படையில் சி.பி ஐ. செயல்படும் விதம் குறித்து கேள்வி எழுப்பவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளது.

# வட கொரியா அணு ஆயுதம் அமைதி தீர்வுக்கு விருப்பம்

(பொன்ஜியாங்)

அணுவாயுதப் பிரச்சினையை சமாதான முறையில் ஐ. நாவுடன் பேசித் தீர்த்துக் கொள்ள விரும்புவதாக வட கொரியா கூறியுள்ளது. வட கொரியத் தலைநகர் பொன்ஜியாங் சென்றிருக்கும் ஐ. நா.பொதுச் செயலாளர் பூட்டர்ஸ் பூட்டர்ஸ் காலியிடம் வடகொரிய அரசு இதனைத் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை வடகொரிய அரசு தனது வசமுள்ள தொழில்நுட்பத்தை பயன்படுத்தி எதிர்வரும் பதினைந்து வருடங்களில் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை தயாரிக்கும் ஆற்றலை அது பெற்று விடும் என்று சி.ஐ.ஏ யின் உத்தியோகபூர்வ அறிக்கை யொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஏவுகணைகளை பயன்படுத்தி அமெரிக்காவை வடகொரியாதாக்கக் கூடியதாக இருக்கும் எனவும், எனினும் வடகொரியா எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளே இவற்றைக் தடுத்து வருவதாகவும் சி.ஐ ஏ.மேலும் கூறியுள்ளது.

# பொதுவாழ்வில் பொறுப்புணர்வு பாரம்பரியத்தை நிலைநாட்டினார்

## யஸ்வந்த்சிங்

(டில்லி)

நிதியமைச்சர்டாக்டர் மன்மோகன் சிங் பதவி விலக முன் வந்திருப்பதன் மூலம் பொதுவாழ்வில் பொறுப்புணர்வின் உயர் பாரம்பரியத்தை நிலைநாட்டியிருக்கின்றார். இவ்வாறு பங்குப்பத்திர ஊழல் தொடர்பான கூட்டுப் பாராளுமன்ற விசாரணைக் கமிசனில் அங்கம் வகித்த பாரதீய ஜனதாக் கட்சியின் உறுப்பினரான யஸ்வந்த் சிங் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் நிதியமைச்சர் மிகவும் நேர்மையானவர் எனவும் தெரிவித்தார்.

# இந்தியா முன்னணியில்

(டாக்கா)

டாக்காவில் நடைபெறும் தெற்காசிய பெடரேசன் விளையாட்டுப்போட்டிகளில் இந்தியா 92பதக்கங்களை வென்று முன்னணியில் உள்ளது. இந்த 92பதக்கங்களில் 36தங்கப் பதக்கங்களாகும்.

# சந்தனமரக் கடத்தல்

(சென்னை)

கோயம்புத் தூரில் நடப்பாண்டில் மட்டும் பதினொரு லட்சம்ரூபா பெறுமதியான சந்தன மரக் கட்டைகள் கடத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டதாகவும், இவற்றைக் கடத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட 28வாகனங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் மாவட்ட வனத்துறை அதிகாரி கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் இது தொடர்பாக 284பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

# டாக்கா பயணமானார்

(சென்னை)

டாக்காவில் தற்போது நடைபெறும் தெற்காசிய பெடரேசனின் விளையாட்டுப் போட்டிகள் வரும் திங்கட்கிழமையன்று முடிவடையும் போது அதன் கொடியை தமிழ் நாடு மாநில கல்வி அமைச்சர் கே. பொன்னுச்சாமி பெற்றுக்கொள்வார். அடுத்த விளையாட்டுப் போட்டி தமிழ்நாடு மாநிலத் தலைநகர் சென்னையில் நடைபெற இருப்பது தெரிந்ததே. இந்த வைபவத்தில் கலந்துகொள்வதற்காக மாநில கல்வி அமைச்சர் நேற்று சென்னையிலிருந்து டாக்கா பயணமானார்.

# புதிய அரசியலமைப்பு அமுலுக்கு வந்தது

(மாஸ்கோ)

ரஷ்யாவில் கடந்த பன்னிரண்டாம் திகதியன்று நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு நேற்று முன் தினம் முதல் அமுலுக்கு வந்திருப்பதாக ரஷ்ய அரசின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

# தொண்டர் நிறுவனங்கள்மீது சிறிலங்கா அரசாங்கம் கெடுபிடி

(கொழும்பு)

மனித உரிமை குழுக்களும் அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களும் தம்மை பதிவு செய்து கொள்ள வேண்டும் எனவும் நிதி நிலைமையை அரசு கண்காணித்து வரும் எனவும் சிறிலங்கா அரசு வர்த்தமானி அறிவிப்பு மூலம் வெளியிட்டுள்ளது.

அரசின் இவ் அறிவிப்பை இந் நிறுவனங்கள் வன்மையாக கண்டித்துள்ளன. அரசாங்கம் அமுல் செய்துள்ள அவசரகால சட்ட விதிகளின் கீழேயே இவ் வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அரசின் இவ் அறிவிப்பை யிட்டு கருத்து வெளியிட்ட சிறிலங்காவில் செயல்படும் மனித உரிமைகள் அமைப்பு இவ் விதிகளுக்கு அமைய செயல்படுவது கடினம் என தெரிவித்துள்ளதுடன் அறிவிப்பிற்கு கண்டனமும் தெரிவித்துள்ளது.

## பனம் விதை நடுகை

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒடுசுட்டான் பகுதியில், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்தி பகுதியினரால் 7000 பனம் விதைகள் நடப்பட்டுள்ளன.

## காக்கைதீவில் காடு வளர்ப்பு

காக்கைதீவு பகுதியில் காடு வளர்ப்பு திட்டமொன்றை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஆரம்பித்துள்ளது. கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்நடவடிக்கையில் பூவரசு, ஆல் போன்ற கதியால்களும் பத்து அடிக்கு ஒன்றாக நாட்டப்பட்டுவருகின்றன.

## செஞ்சுடர் கலைக்கழக அலுவலகம் திறப்பு

(தொல்புரம்)

தொல்புரத்தில் கலைஞர்கள் கௌரவிப்பும் செஞ்சுடர் கலைக் கழக காரியாலயத் திறப்பு விழாவும் வெகு விமரிசையாக நடைபெற்றன.

நேற்று மாலை 3. 00 மணியளவில் தொல்புரம் சிற்றூர் செயலகத்தில் கழகத் தலைவர் திரு. க. சிவராசா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவினை தொல்புரம் கிராமியப்பொறுப்பாளர் சி. கீரன் அவர்கள் மங்கள விளக்கினை ஏற்றி ஆரம்பித்து வைத்தார். தமிழீழ மண்மீட்பிற்காக மரணத்தவர்களுக்கு மௌனஞ்சலி செய்யப்பட்டதை அடுத்து வலிகாமம் கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் திரு, பொழிலன் அவர்கள் சங்கானை வட்ட செஞ்சுடர் கலைக்கழக பெயர்ப் பலகையை திரை நீக்கம் செய்து வைத்தார். யாழ் மாவட்ட கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு. அன்பரசன் அவர்கள் சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டி கழக காரியாலயத்தினை திறந்து வைத்தார்.

சிவகுமார் குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி நிகழ்வில் ''சின்ன விழிகள்' குறுப்படத்தில் பங்கு கொண்ட கலைஞர்களான செல்வன் க. புலேந்திரன், செல்வி சி. காயத்திரி குதிரையாட்டக் கலைஞர் திரு செ பரமேஸ்வரநாதன். நாதஸ்வர கலைஞர் இ சிவகுமார், தவில் கலைஞர் சு. சிவகுமார் ஆகிய கலைஞர்கள் சங்கானை வட்ட மேற்படி கழகத்தினராலும், கிராம மக்களாலும் மற்றும் அனைவரினாலும் பொன்னாடை போர்த்தியும் பரிசில்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர். இவர்களுக்கான பரிசில்களை நாடக நெறியாளர் திரு செல்வம், நடுவப்பணியக கலை பண்பாட்டுக் கழக மகளிர் பொறுப்பாளர் செல்வி கலைமணி ஆகியோர் வழங்கி கலைஞர்களை கௌரவித்தனர்

மேலும் நிகழ்வில் கலந்து கொண்ட தமிழீழவிடுதலைப் புலிகள் உறுப்பினர் அனைவரும் சிறப்புரையாற்றினர் இறுதியில் கலை நிகழ்ச்சிகளும், ''சின்ன விழிகள் குறும்பட வீடியோ படக்காட்சியும் இடம் பெற்றன பெருந்திரளான மக்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(41)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 26-12-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11752

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-9825, 26-5113, 41-6686, 27-5633, 24-5877, 40-7351, 40-6979, 41-9652, 42-6511, 26.6745, 27-9719, 26-7187, 28-0711, 22-3379, 26-5244, 26-8917, 27-7822, 28-9633, 41-9038, 41-9396, 24-9744, 26-2421, 41-9895, 24-8212, 24-5140, 26-6984, 24-6941, 43-1062.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-9658, 28 1110, 24-9490, 26-8810, 42-0970, 40-9085.

## பொருள்கள் விநியோகம்

(தென்மராட்சி)

கொடிகாமம், தென்மராட்சி பலநோக்கு கூட்டுறவு சங்கக் கடைகளில் 8-வது தொடர் 9ம் புள்ளி உணவு முத்திரை (மார்கழி மாதத்திற்கான) விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே

## செயலமர்வு

க.பொ.த. (உ/ம்) கணித விஞ்ஞான ஆசிரியர்களுக்கான பௌதீகவியல் செயலமர்வு யா / வேம்படி மகளிர் கல்லூரியில் யாழ். தெற்கு பிரதேசகல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி அவர்களாலும், தூயகணிதம் பிரயோக கணிதம், இரசாயனவியல் செயலமர்வுகள் யாழ். வடக்கு பிரதேச கல்விப்பணிப்பாளர் கே கந்தசாமி அவர்களாலும் மங்கள விளக்கேற்றி இன்று காலை 8-30 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படும் என உதவி கல்விப் பணிப்பாளர் அ. வேதநாயகம் அறிவிக்கிறார்.

## வடக்கு-கிழக்கில் விரைவில் கிராமசேவகர் நியமனம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் கூடிய விரைவில் கிராம சேவையாளர்களை நியமிப்பதற்கான அமைச்சரவை அனுமதியைப் பெற்றுள்ளேன்'' என்று உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் தனது அமைச்சுக்கான வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு-கிழக்கிலும், ஏனைய பகுதிகளில் போன்று கிராம சேவையாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. தேசிய பாதுகாப்பு அறிக்கைகளை பெறுவதில் தாமதம் நிலவியதனாலேயே உரிய காலத்தில் இந்த நியமனங்களை வழங்க முடியாது போனது. இருந்தாலும் இந்த நியமனங்களை கூடியவிரைவில்வழங்க அமைச்சரவையின் அனுமதியை பெற்றுள்ளேன் எனவும் தெரிவித்தார்.

## ஆயுர்வேத மருத்துவ முறை அரை குறையானது அல்ல

### பி. வி. நரசிம்மராவ்

(டில்லி)

ஆயுர்வேத மருத்துவத் துறைக்கென தனியான இயக்கம் அல்லது அமைச்சரகம் ஒன்று ஏற்படுத்தப்படலாம் என்றுஇந்திய பிரதமர் பி வி. நரசிம்மராவ் கூறியுள்ளார்.

நாக்பூரில் 54 வது அனைத்திந்திய ஆயுர்வேத மாநாட்டை நேற்று முன்தினம் துவக்கி வைத்துப் பேசிய அவர் மேலும் குறிப்பிடுகையில் ஆயுர்வேத மருந்தியல் பற்றிய விபரங்கள் தொகுக்கப்படவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். ஆயுர்வேத முறைகளை கற்றுக் கொடுப்பதில் உயர்ந்த நிலை பாதுகாக்கப்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் உள்நாட்டு மருத்துவ முறைகளுக்கு இரண்டாம் தர அந்தஸ்து வழங்கப்படுவது குறித்து வருத்தம் வெளியிட்டதுடன், உள்நாட்டு மருத்துவம் அரை குறையானது அலல என்றும் இதனை மேலைத்தேச மருத்துவ வல்லுனர்கள் கூட தற்போது உணரத் தொடங்கியிருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் ஆயுர்வேத மருத்துவ முறைகளை இரகசியமாக வைத்திருக்கும் தன்மை கைவிடப்பட்டு அதில் குறைகள் இருப்பின் அது களையப்பட வேண்டும் என்றும் நவீன மருத்துவ முறையால் குணமாக்கப்பட முடியாத எத்தனையோ நோய்கள் மூலிகைகள் மூலம் குணப்படுத்தக்கூடியதாக இருக்கிறது என்றும் இந்த வகையில் ஆயுர்வேத மருத்துவ முறைகளை நன்கு வளர்க்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## 50000 பனை விதைகள் பூநகரியில் நாட்டப்பட்டது

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதி வழங்கிய ஊக்குவிப்பினால் பூநகரி ப.நோ கூ சங்கம் 50000பனை விதைகளை நாட்டியுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள சுண்ணாவில், பல்லவராயன் கட்டு, கரியாலை நாகபடுவான், முழங்காவில், இரணைமாதா நகர், செக்காலை, பத்தினிப்பாய், விக்ரர் எழுச்சிக் கிராமம் ஆகிய இடங்களில்பாடசாலைமாணவர்கள், சங்கக்கிளைக் குழுக்கள்மகளிர்குழுக்கள், கிராமிய உற்பத்திக்குழுக்கள் ஊடாக இவ் விதைகள் நாட்டப்பட்டன.

1992ஆம் ஆண்டு காலப் பகுதியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதி வழங்கிய ஊக்குவிப்பினால் இம்மாவட்டத்தில் உள்ள பல்வேறு பகுதிகளில் மேற்படி சங்கத்தால் நாட்டப்பட்ட 20ஆயிரத்திற்கும் அதிகமான பனை விதைகளில் பெரும்பாலானவை

## அரசியல்வாதிகள்

சிலர் நினைக்கின்றார்கள் துப்பாக்கிகளை கொடுத்து சீருடையையும் கொடுத்துவிட்டால் மட்டும் போதும் என்று

## கம்பு பயிர்ச்செய்கை ஊக்குவிக்க நடவடிக்கை

கம்புப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் முயற்சியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஈடுபட்டுள்ளது. வலிகாமம் கோட்டத்தில் வட்டப்பிரிவு ஒன்றுக்கு கால் ஏக்கரில் பயிரிடக்கூடிய கம்புத்தானியம் கிராமிய உற்பத்திக்குழுக்களின் ஊடாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால்வழங்கப்பட்டுவருகிறது. இக் கம்புத் தானியம் 1990-ல் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் தமிழீழப் பகுதியில் அறிமுகமாக்கப்பட்டது தெரிந்ததே.

## தாயைப்போல் தாய் நாட்டை நேசித்தவன்...

எமது ஆசிரியைதிருமதி வி.குழந்தைவேலுவின்அன்புச் செல்வம் சத்தியேந்திரா(2-ம் லெப்- சிவகுமாரன்) வீரச்சாவடைந்த செய்திகேட்டு எமது கழகம்ஆற்றொணாத் துயரடைகின்றது. சாதனைக்குச் சாட்சியாக நின்றவன் வேதனையின் விளிம்பில் எம்மை விட்டுச் சென்றுவிட்டான் மகனை இழந்த பெற்றோருக்கும் சகோதரனை இழந்த உடன்பிறப்புகளுக்கும் ஆறுதல் சொல்ல வார்த்தைகள் இன்றித் தவிக்கிறோம் உற்றவிடத்து உதவும் உயர் நோக்கம் கொண்ட எம் ஆசிரியைக்கு இவ் இழப்பு ஏன்? விடை காணமுடியவில்லை. இருந்தும் ஓர் ஒளிக்கீற்று பெற்றோரைப்போல் இவனும் மற்றையோரை நேசித்தான் தாயை நேசிப்பவன் மனிதன். தாயைப்போல் தாய்நாட்டையும் மொழியையும் நேசித்த காரணத்தால் தன் உயிரையே காவு கொடுத்துமாவீரனானான் இவன் போற்றப்படவேண்டியவன். இவனதுபுகழுடம்பில் எம்மினம் வாழப் போகிறது. நாம்சுவாசிக்கப்போகும் சுதந்திரக்காற்று இவனுக்கும்இவன் போன்றோருக்கும்இனியநறுமணம் கமழும் மந்த மாருதமாகும் இது இவர்களது தூபிகளைக்கடந்துசெல்லும்போது அந்தநறுமணத்தில்அவர்கள் ஆறுதலடைவார்கள் சாதாரண மனிதர்களின் சாவுகள் மண்ணில் மறைந்துவிடும் அமரன் சிவகுமாரனின் சாவு மண்ணில் மறையாது நின்று நிலைத்து நீடு வாழும்

துன்பத்தில் துவளும் பெற்றோருக்கும் மற்றையோர்க்கும் இறைவன் அமைதியைக் கொடுக்க வேண்டி இளவலின்ஆன்மாசாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்

ஆசிரியர் கழகம்

யாழ். பெரியபுலம் ம. வி
யாழ்ப்பாணம்.

(சி8224)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு:
29-11-1971

## வாகன இலக்கங்கள்

## 26-12-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11752

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-9825, 26-5113, 41-6686, 27-5633, 24-5877, 40-7351, 40-6979, 41-9652, 42-6511, 26.6745, 27-9719, 26-7187, 28-0711, 22-3379, 26-5244, 26-8917, 27-7822, 28-9633, 41-9038, 41-9396, 24-9744, 26-2421, 41-9895, 24-8212, 24-5140, 26-6984, 24-6941, 43-1062.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-9658, 28 1110, 24-9490, 26-8810, 42-0970, 40-9085.

### யாழ். மாவட்ட தனியார் கல்வி
## நிறுவன வேண்டுகோள்

க. பொ. த. உயர்தர கலை, வர்த்தக, விஞ்ஞான பட்டப்படிப்பு பிரிவுகளுக்கான பாடத்திட்டம் தயார் செய்ய வேண்டியுள்ளதால் சகல துறைகளையும் சேர்ந்த ஆசிரியர்களை பின்வரும் நேர அட்டவணைப் படி 29-12-93 புதன்கிழமை எழிலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள புதிய விஞ்ஞானக கல்விக் கழகத்திற்கு வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

கலை, வர்த்தகம் - மு. ப. 10-00
விஞ்ஞானப் பிரிவு - மு. ப. 11-00
பட்டபபடிப்புகள் - ந ப 12-00

### முக்கிய அறிவித்தல்

இதுவரை காலமும் பதிவு செய்யாமல் இயங்கிவந்த சகல தனிப்பட்ட வகுப்புகளையும் 05-01-94க்கு முன்னர் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். 05-01-94 பின்னர் பதிவு செய்யாத எந்த ஒரு தனிப்பட்ட வகுப்புகளும் இயங்க இயலாது என்பதை அறியத் தருகிறோம்.

(சி-8223) பொதுச் செயலாளர்

## பதவி வெற்றிடங்கள்

பதவிகள்:-

(1) கணக்காளர்
(2) களஞ்சியப் பொறுப்பாளர்
(3) காசாளர்
(4) விற்பனையாளர்

தென்மராட்சிப் பகுதியில் உள்ள வியாபார நிறுவனத்திற்கு மேல்வரும் பதவிகளுக்கு வெற்றிடம்உண்டு

ஆர்வமுடையோர் சாவகச்சேரி நிதித்துறையின் வருவாய்ப்பகுதி அலுவலகத்தில் சகல சான்றிதழ்களுடனும் 28-12-93 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

நிர்வாகி

(சி-8216) சேரன் பல்பொருள் வாணிபம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம்ஆண்டு சம்பர் மாதம் 27ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது டி.

புலிகள் உறுப்பினர் அனைவரும் சிறப்புரையாற்றினர் இறுதியில் கலை நிகழ்ச்சிகளும், ''சின்ன விழிகள் குறும்பட வீடியோ படக்காட்சியும் இடம் பெற்றன பெருந்திரளான மக்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (41)

## பொருள்கள் விநியோகம்

(தென்மராட்சி)

கொடிகாமம், தென்மராட்சி பலநோக்கு கூட்டுறவு சங்கக் கடைகளில் 8-வது தொடர் 9ம் புள்ளி உணவு முத்திரை (மார்கழி மாதத்திற்கான) விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே 30.12 93ற்கு முன்னர் உணவு முத்திரை வைத்திருப்போர் பொருள்களை பெற்றுக் கொள்ளுமாறு சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (86)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி சன்மார்க்க நுண்கலை மன்றம் நடாத்திவரும் மாதாந்த கருத்தரங்கு தொடர்-6 நாளை செவ்வாய்க்கிழமை காலை 8-30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் நடைபெறவுள்ளது.

கலாகேசரி ஆ.தம்பித்துரை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் இளம் எழுத்தாளர் மு. விஜயராகவன் கௌரவிக்கப்படவுள்ளதுடன் ''பைசாந்தியக்கலை'' என்னும் பொருள்பற்றி பிரதிமை கலைமாமணி க. இராசரத்தினமும்'' ''அரசாங்க வரலாற்று பாட நூல்களில் திரிபு படுத்தப்பட்ட தமிழர் கலைகள்'' எனும் பொருள்பற்றி யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ப. புஸ்பரட்ணமும் கருத்துரைவழங்குவர்.

## கண்டெடுப்பு

பெண்களுக்கான கைக்கடிகாரம் ஒன்று கே.கே எஸ். வீதியில் கிடக்க யாழ். இந்து கல்லூரி மாணவன் பிரகலாதனால் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

## அறிவியலரங்கு

நாயன்மார்கட்டு சனசமூக நிலையத்தினரால் மாதாந்தம் நடாத்தப்பட்டுவரும் அறிவியல் கருத்தரங்கின் தொடர்17இல் இன்றுமாலை 6.00 மணிக்கு''கிராமிய இலக்கியங்களும் சமுதாய அழுத்தமும்'' என்ற தலைப்பில் ஆசிரியை திருமதி மீரா கருத்துரையாற்றவுள்ளார்.

## 50000 பனை விதைகள் பூநகரியில் நாட்டப்பட்டது

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதி வழங்கிய ஊக்குவிப்பினால் பூநகரி ப.நோ கூ சங்கம் 50000பனை விதைகளை நாட்டியுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள சுண்ணாவில், பல்லவராயன் கட்டு,கரியாலை நாகபடுவான், முழங்காவில், இரணைமாதா நகர், செக்காலை, பத்தினிப்பாய், விக்ரர் எழுச்சிக் கிராமம் ஆகிய இடங்களில்பாடசாலைமாணவர்கள், சங்கக்கிளைக் குழுக்கள்மகளிர்குழுக்கள்,கிராமிய உற்பத்திக்குழுக்கள் ஊடாக இவ் விதைகள் நாட்டப்பட்டன.

1992ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதி வழங்கிய ஊக்குவிப்பினால் இம்மாவட்டத்தில் உள்ள பல்வேறு பகுதிகளில் மேற்படி சங்கத்தால் நாட்டப்பட்ட 20ஆயிரத்திற்கும் அதிகமான பனை விதைகளில் பெரும்பாலானவை தற்போது முளைத்துப் பயிராக இருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

### அரசியல்வாதிகள்

சிலர் நினைக்கின்றார்கள் துப்பாக்கிகளை கொடுத்து சீருடையையும் கொடுத்துவிட்டால் மட்டும் போதும் என்று இப்படி யுத்தம் செய்ய முடியாது பல கஷ்டங்களுக்கும், இன்னல்களுக்கும் மத்தியில் இன்று யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

யுத்தத்தில் பல ஊழல்கள் நடைபெறுகின்றன. இதனை பற்றி கேட்டால் அடுத்த மாதம் தருவோம் என்கின்றார்கள். அடுத்த மாதமும் விபரத்தினைத் தருவதாக இல்லை சென்ற மாதம் நடைபெற்ற யுத்தத்தால் ஏற்பட்ட படையினரின் உயிரிழப்பை கூடக் கணக்கிட்டுக் கூறமுடியாது உள்ளது இப்படியான ஒரு யுத்தம் எமக்கு வேண்டுமா?

யுத்தத்தினால் 4000ற்கு மேற்பட்ட படையினர் அங்கவீனர் ஆக்கப்பட்டுள்ளனர். இவர்களை நாம் பாதுகாக்க வேண்டும். இது தொடர்பாக எவரும் இதுவரை முயற்சிகள் மேற்கொண்டதாக தெரியவில்லை. யுத்தம் ஒன்று தொடங்கினால் யுத்தத்தை செய்ய வேண்டும் இது தவிர்க்க முடியாத ஒன்று

யுத்தம் இன்று தனிநபர் நலன் உள்ள வியாபாரமாக நடைபெறுகின்றது பலர் யுத்தத்தைக் காட்டி தமது நலன்களைப் பெற்றுக் கொள்கிறார்கள் அப்பாவி இளைஞர்கள் நாளாந்தம் செத்து மடிந்து கொண்டிருக்கிறார்கள் என்றார்

### கப்பல்

படுகிறது.

இதில் நடைபெற்ற க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள்களும் எடுத்துச்செல்லப்படவுள்ளது. (பா)

### கண்பார்வை

படைவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. கொழும்பு கண் வைத்தியசாலையில் சுமார் 50 நோயாளர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

### சமூகமேம்பாட்டுதிட்டம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தமிழீழத்தின் பொருளாதார வளர்ச்சியையும், அபிவிருத்தியையும் ஏற்படுத்தும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டு வரும் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பளைப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் நல்லின ஆடுவளர்ப்புத் திட்டத்தை விருத்தி செய்வதற்காக அரியாலை, உரும்பராய் ஆகிய பகுதிகளில் இருந்து நலலின ஜமுனாபறி இனத்தைச் சேர்ந்த சடாக்கள் கொள்வனவு செய்து அப்பகுதிகளில் வழங்கப்பட்டுள்ளன,

### பயிற்சி வகுப்பு

இவ்வாண்டில் யாழ்மாவட்ட கணிதவிஞ்ஞான மூல வளநிலையத்தில் கணிதபாட செயன் முறைப் பயிற்சி நெறியில் கலந்து கொண்ட சகல ஆசிரியர்களிற்குமான செயலமர்வு ஒன்று எதிர்வரும் இரண்டாம் திகதி காலை 8.30 முதல் மலை 4.30 வரை மேற்படி நிலையத்தில் நடைபெற உள்ளது நடைபெற்ற பயிற்சி நெறியில் வழங்கப்பட்ட வரவுச் சான்றிதழ்களுடன் அனைவரும் தவறாது சமுகம் தரும்படி கேட்கப்படுகின்றனர்.

### வகுப்புகள்

யாழ்ப்பாணம் புனித மரியாள் வித்தியாலயத்தில் இயங்கும் 'நளா' கல்வி வளர்ச்சிக் கழகத்தின் பகல் மற்றும் இரவுநேர வகுப்புக்கள் அனைத்தும் இன்று முதல் வழமைபோல நடைபெறவுள்ளது எனவே சகல மாணவர்களையும், கற்பிக்கும் ஆசிரியர்களையும் தவறாது சமுகம் தரும்படி தீவகக் கோட்ட மாணவர் அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

நிலைத்து நீடு வாழும்

துன்பத்தில் துவளும் பெற்றோருக்கும் மற்றையோர்க்கும் இறைவன் அமைதியைக் கொடுக்க வேண்டி இளவலின்ஆன்மாசாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்

ஆசிரியர் கழகம்

(சி8224) யாழ். பெரியபுலம் ம. வி யாழ்ப்பாணம்.

## 45-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 29-11-1971

வீரச்சாவு: 13-11-1993

### கப்டன் சாமி
### (இராசையா வசந்தன்)

புலிவீரனாய் பூநகரிக்கு புறப்பட்டாய்
கப்டன் சாமியாகி விதைக்கப்பட்டாய்
பாசமழை பொழிய வந்தாய் கண்ணீர் மழை
பொழிய வைத்தாய்

இன்று எமதில்லத்தில் இடம்பெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு போராளிகளையும் உற்றார், உறவினர்களையும் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் துடிக்கும்
தாய், சகோதர, சகோதரிகள்,
பெரியப்பா மற்றும் சகோதரர்

47, எ வி. வீதி,
அரியாலை.
(7056)

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் கிருஷ்ணர்

சில்லாலை, பண்டத்தரிப்பைச்சேர்ந்த வைத்திலிங்கம்கிருஷ்ணர்(25-12-93) சனிக்கிழமை காலமானார். அன்னார் மனோன்மணியின் அன்புக்கணவரும், மகேஸ்வரி, இராசரத்தினம், குணரத்தினம் (சவுதி), யோகரத்தினம் (கனடா), புஸ்பராணி (கனடா), தெய்வேந்திரம் (கனடா), வரதராஜா (கனடா), கஜேந்திரன் (கனடா), மனோரஞ்சிதம், சறோஜினி தேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், பொன்னுத்துரை, ஜெகசோதி, சுபேந்திரன், சுசிலா, யோகராணி (கனடா), ரஞ்சினி (கனடா), ஆகியோரின் மாமனாரும், திருமதி சாந்தினிதேவி, குகபாலன் (பிரான்ஸ்), சாரதாதேவி, பத்மாவதி, குலேந்திராதேவி, சிவகுமார் (கனடா), பகீரதி, கிருஸ்ணகுமார் சாந்தகுமார், தயாபரன், காண்டீபன், கருணாகரன், குணசீலன், தர்ஷசன், வேணுகானன் (கனடா), பிறண்ண (கனடா), சகானா (கனடா), நிவேஜன், நிறோஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் (25-12-93) அன்று நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
கி. இராசரத்தினம்
(மகன்)

காளிகோவிலடி,
சங்கானை. (7052)